விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 19 சனிக்கிழமை (05.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351




# பத்து அம்ச கோரிக்கையை முன்வைத்து ஜனாதிபதி மகிந்தவுக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு



## அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

(கொழும்பு)

எமது மக்களின் தலைவிதியை தீர்மானிக்க முடிந்த நடைமுறைச் சாத்தியமான பாதையை நோக்கி பத்து அம்சக் கோரிக்கைகளை முன் நிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது என தமது கட்சி தீர்மானித்திருப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடகங்களுக்கான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பணத்தில் வெற்றிபெற ஜனாதிபதி மகிந்த முயற்சிக்கிறார்

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்து வெற்றி பெற்று பதவியேற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறை தேர்தலில் விடுதலைப் புலிகளிடம் இருந்து பெற்ற பணத்தைக் கொண்டு வெற்றி பெற முயற்சிக்கிறார் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிலாபத்தில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்டத்திற்கான புதிய அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு (16ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நவாலி களையோடைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேற்குறித்த சடலம் சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியைச் சேர்ந்த 36 வயதான ஆர்.செல்வமாா என்பவருடையது என அடையாளம் காணப் பட்டுள்ளது. (ச-5)

## நலன்புரி முகாமிலிருந்து சென்றவர்கள் திரும்ப வேண்டும் என்ற கட்டுப்பாடில்லை

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாமில் இருந்து வெளியில் சென்றவர்கள் திரும்பி வர வேண்டும் என அரசாங்கம் கட்டுப்பாடுகள் எதனையும் விதிக்கவில்லை. அவர்கள் வெளியில் சென்ற இடங்களிலேயே தங்கலாம் என இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார். ஊடகவியலாளர் சந்திப்பில் முகாம்மக்களுக்கு வழங்கப்பட்ட நடமாடும் சுதந்திரம் மற்றும்மீள் குடியேற்றம் (16ஆம் பக்கம் பார்க்க)

## சுயமாகச் சிந்தித்து முடிபெடுக்கும் திறனை கூட்டமைப்பு இழக்கவில்லை

### சிறிகாந்தா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுயமாகச் சிந்தித்து சுதந்திர மாக முடிபெடுக்கும் திறனை கூட்டமைப்பு இழந்து விடவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன்னால் சில தெரிவுகள் உள்ளன.

இத் தெரிவுகளில் நாங்கள் எதனை கைக் கொள்ளவேண்டும் என்பது பற்றி இப் பொழுது பலரும் எமக்கு அறிவுரை வழங்க ஆரம்பித்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தம்பதியினர் நேற்றிரவு கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



### சோனக தெருவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காதி அபூபக்கர் வீதி, சோனக தெருவில் இளம் தம் பதியினர் கிணற்றிலிருந்து நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த தவராஜா கஜமுகன் (வயது 27), அவரது மனைவி ஜெயமாலினி (வயது 20) ஆகியஇருவரும் சடலமாக மீட்கப் பட்டுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா அழைக்கிறது ரணில் இன்று செல்கிறார்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள விசேட அழைப்பொன்றை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இன்று இந்தியா புறப்பட்டுச் செல்லவுள்ளார். இன்று முற்பகல் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய சம்மேளனம் முடிபடைந்தவுடன் அவர் புதுடில்லி (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராக மருதானையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு எதிராக கொழும்பு மருதானையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் மருதானை ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

எனினும் இந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் மகன் அரசியல் பிரவேசம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மகன் விமுக்தி குமாரதுங்கா அரசியலில் பிரவேசிக்கவுள்ளதாகவும் அவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவார் எனவும் கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது, (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர்!



### நிறுத்தப்படுவார் அல்லாவிடின் நிற்பேன் என்கிறார் சிவாஜிலிங்கம்

(சென்னை)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முடிவு செய்திருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய சிவாஜிலிங்கம் எம்.பி. இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழர்களுக்கு எதிராக செயற்பட ஜனாதிபதி ராஜபக்ஷவும் முன்னாள் தளபதி பொன் (16ஆம் பக்கம் பார்க்க)


## கே.கே.எஸ். வீதியில் நேற்று திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் நேற்று மருதனார்மடம், சுன்னாகம் மற்றும் மல்லாகம் பகுதிகளில் நேற்றுக்காலை இராணுவ வீதி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை மாணவிகள், அரச ஊழியர்கள் உட்பட அனைவரும், வாகனங்களில் சென்றவர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



திருமறைக் கலாமன்றத்தில் நேற்று நடைபெற்ற இளைஞர் விருது விழாவில் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும், விருந்தினர்கள் உரையாற்றுவதையும், வெற்றி பெற்றோருக்கு விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் ,நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## கடமையின் போது மதுபோதையில் இருந்த கிராம அலுவலருக்கு விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

கடமையில் ஈடுபட்டு இருந்த போது மது போதையிலிருந்த கிராம அலுவலர் ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது,

மல்லாகம் பகுதியில் உள்ள கிராம அலுவலர் ஒருவர் குடும்பப் பதிவுகளை மேற்கொள்ளச் சென்ற ஒருவரை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இது குறித்து பிரஸ்தாப நபர் சுன்னாம் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரஸ்தாப கிராம அலுவலரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஏ)

## அரசியல் கோமாளிகளின் கைதியாக பொன்சேகா மாறியுள்ளாரா?

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடும் சரத் பொன் சேகா உண்மையில் அரசியல் கோமா ளிகளின் கைதியாக மாறியுள்ளதாக ஊடக அமைச்சர் அனுர பிரியதர் சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லா தொழிக்கப்படும் எனவும்,17 ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்படும் எனவும் எதிர்க்கட்சிகள் சில யதார்த்தத்திற்குப் புறம்பான வாக்குறுதிகளை அளித்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.ஏன் எனில் நாடாளு மன்றத்தின் பெரும்பான்மை பலமின்றி ஒரு போதும் அரசியல் சாசனத்தில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியா து என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


மாபெரும் மலிவு விற்பனை

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

01.12.2009 முதல் 31.12.2009 வரை

சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

லைடன் புடைவை நிலையம்



இல.40, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2381


## அரசாங்க அதிபரின் அறிவித்தல்

### மணல் விநியோகம் தொடர்பானது

யாழ். மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த மணல் விநியோகச் செயற்பாடுகள் 2009.12.07ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 100ம் இலக்க கட்டடத்தில் இருந்து *மகேஸ்வரி ஞாபகார்த்த நிறுவனத்தினரால்* மேற் கொள்ளப்படும் என்பதனை பயனாளிகள் யாவருக்கும் அறியத் தரப்படுகின்றது.

பயனாளிகள் 2009.12.07ஆம் திகதி தொடக்கம் 4ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள *மகேஸ்வரி ஞாபகார்த்த* நிறு வனத்தினரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C-3850)

## யாழ்ப்பாணம், மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள் கேள்வி அறிவித்தல் - 2010

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2010ஆம் திகதி முதல் 31.12.2010ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | – ரூ 400.00 | (வற் வரி நீங்கலாக) |
| கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி | – 15.12.2009 | மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் | – 15.12.2009 | நண்பகல் 12.00மணி வரை |
| கேள்வி திறத்தல் | – 15.12.2009 | பிற்பகல் 2.00மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 15.12.2009ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு:- 04.11.2009ஆம் திகதி வெளியான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04.12.2009.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

| இல. | சந்தை/கடையின் பெயர் | கடை இல. | பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | | 10,000 | 3500000 |
| 02. | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000 | 1500000 |
| 03. | புங்கன்குளம் சந்தை | | 2000 | 10000 |
| 04. | யாழ்.பொதுசன நூலக சிற்றுண்டிச் சாலை | | 5000 | 12000 |
| | | | | |
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 4 | 5000 | 115000 |
| 02. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | 2 | 5000 | 140000 |
| 03. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 1 | 5000 | 195000 |
| 04. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 2 | 5000 | 110000 |
| 05. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 4 | 5000 | 70000 |
| 06. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 5 | 5000 | 55500 |
| 07. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 6 | 5000 | 70000 |
| 08. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 7 | 5000 | 70000 |
| 09. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 8 | 5000 | 70000 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 9 | 5000 | 70000 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 10 | 5000 | 10000 |
| 12. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | 11 | 2000 | 10000 |
| 13. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | 12 | 2000 | 10000 |
| 14. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 7 | 7000 | 100000 |
| 15. | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | 2 | 5000 | 25000 |

# மாணவர்கள் உடலில் துப்பாக்கி ரவைகள் மருத்துவ சோதனையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிவுற்று ஆறுமாதங்கள் ஆன நிலையில் அதன் பன்முக பாதிப்புக்கள் சிறிது சிறிதாக வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

போரின் போது உடலில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த இளவயது மாணவர்கள் பலருக்கு அவர்களின் உடலிலிருந்து அவை இன்னமும் அகற்றப்படாமலிருப்பது தற்போது தெரியவந்திருக்கிறது.

வழமையான காச நோய் சோதனையின் போது சில மாணவர்கள் தமது உடலில் துப்பாக்கி ரவைகள் இருந்ததாக கூறியதாகவும் உடனே அவர்களை எக்ஸ்ரே மூலம் சோதித்ததில் இது உண்மையென தெரிய வந்ததாகவும் யாழ். மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். ஜமுனானந்தா பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

இதுவரை 13 மாணவர்களின் உடலில் ரவைகளும், குண்டு வெடிப்புத் துகள்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்கள் பலரின் உடலில் இது போன்ற துகள்களும், ரவைகளும் இருக்க வாய்ப்பு இருப்பதால் இது போன்ற பாதிப்புக்குள்ளான மக்கள் மருத்துவ சோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எஸ். ஜமுனானந்தா தெரிவித்தார். (ஓ-6)

# முப்படைத் தளபதிகளுக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வழங்கத் திட்டம்

முப்படைத் தளபதிகளுக்கும் வாழ்நாள் முழுவதிலும் பாதுகாப்பு வழங் கும் வகையிலான புதிய திட்டமொன்றை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார். இந்த யோசனைத் திட்டம் சட்டவாக்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த போதிலும் சில நாடுகளில் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஓய்வு பெறும் படைத்தளபதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் நடை முறைச் சிக்கல் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பன்றிக்காய்ச்சல் நோயை கட்டுப்படுத்த அரசாங்கம் முனைப்புக் காட்டத் தவறியுள்ளது

(கொழும்பு)

துரித கதியில் பரவி வரும் பன்றிக் காய்ச்சல் நோயைக் கட்டுப் படுத்துவதற்காக அரசாங்கம் உரிய முனைப்பு எடுக்கத் தவறியுள்ளதாக அரசாங்க மருத்துவர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்கள் நாடு முழுவதிலும் விரைவில் பரவி வருவதாகவும் இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் தம்மிக்க பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அசமந்தப் போக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெங்கு நோயினால் இந்த ஆண்டில் 300 பேர் கொல்லப்பட்டதுடன் 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வகை தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த விசேட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பன்றிக் காய்ச்சல் நோயினால் இதுவரையில் எட்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# நாட்டை இராணுவத் தளபதி ஒருவரிடம் ஒப்படைக்க முடியாது

## திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

நாட்டை இராணுவத் தளபதி ஒருவரிடம் ஒப்படைக்க முடியாது என விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நீரோட்டத்தில் ஆட்சி அதிகாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தறுவாயில் இராணுவத் தளபதி ஒருவருக்கு ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது பாரதூர மான விளைவுகளை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ள அவர் நாட்டை ஜெனரல் சரத் பொன் சேகாவிடம் ஒப்படைக்குமாறு ஜே.வி.பி. விடுக்கும் கோரிக்கை அதிர்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள் ளார்.



இராணுவத் தளபதி ஒரு வருக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வழங்குவது பொருத்தமாகாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அமெரிக்க குடியுரிமைக்காக காத்திருக்கும் ஒரு நபருக்கு நாட்டின் மிக முக்கிய ஆட்சிப் பொறுப்பை வழங்குவது எந்த வகையில் நியாயமாகுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-6)

# ஊர்காவற்றுறையில் பற்சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் பற்சிகிச்சை நிலையம் அதி நவீன உபகரணங்களுடன் தினமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இதில் டாக்டர் செல்வி றதினி இரட்ணராஜா சிகிச்சை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தவர்களில் 2 ஆயிரத்து 500 பேர் காணாமல் போயுள்ளனர்

## காணாமல் போனோரை தேடியறியும் குழு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தவர்களில் 2500 பேர் காணாமல் போயுள்ளதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக காணாமல் போனோரை தேடியறியும் குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு காணாமல் போனோர் 18 வயது தொடக்கம் 35 வயது வரையிலானவர்கள் 74 வீதமாக இருப்பதாகவும் அக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு காணாமல் போனவர்களை கண்டறிய இதுவரையிலும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது எனவும் அக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தநிலை தொடருமானால் அதற்கெதிராக பாரிய ஆர்ப்பாட்டங்களை செய்ய வேண்டியேற்படும் எனவும் காணாமற் போனோரை தேடியறியும் குழுவின் இணைப்பாளர் ஜெயநித்தி தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கையின் போது கை, கால்களை இழந்து ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கும் அதே போன்று உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்திற்கும் கடந்த ஜே.வி.பி கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் அரசாங்கம் நஷ்டஈட்டை வழங்குகின்றது. அது போலவே இந்த மக்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஊடகவியலாளர் போத்தல ஜெயந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்

(கொழும்பு)

தொலைபேசி மூலம் தொடர்ந்தும் விடுக்கப்பட்டு வந்த மரண அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்புத் தேடி இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் புதிய தலைவரும் திறனாய்வு ஊடகவியலாளருமான போத்தல ஜெயந்த தனது மனைவி மற்றும் மகளுடன் கடந்த 2 ஆம் திகதி வெளிநாடு சென்றுள்ளார்.

கடந்த ஜுன் மாதம் முதலாம் திகதி கடத்தப்பட்டு தாக்கப்பட்ட போத்தல ஜெயந்த படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

எனினும் இந்த சம்பவம் குறித்த விசாரணைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தாம் கூறியவாறு வாயை அடக்கிக் கொள்ளவில்லை எனில் கொலை செய்யப்படுவாய் என அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புகள் தொடர்ந்துள்ளன. இந்த தொலைபேசி அழைப்புகள் பற்றி பொலிஸாரிடம் முறையிட்டால் குடும்பத்துடன் கொலை செய்யப்படுவீர்கள் என மிரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கையில் வசிப்பது போத்தல ஜெயந்தவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆபத்தானது என தீர்மானித்த கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் சிலர் அவரை 36 மணித்தியாலங்களுக்குள் நாட்டில் இருந்து வெளியேற தயாராகுமாறு அறிவித்ததுடன் விமானத்தில் ஏறும் வரை பாதுகாப்பாக அழைத்துச் சென்றுள்ளதாகவும் இந்த நடவடிக்கையானது இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்பதை வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஏற்றுக் கொண்டதாகும் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கையின் மனித உரிமை சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA)
(MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்கள்
To Whom : பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Diploma in English 100 % வெற்றி
100 % பயிற்சி Advanced Diploma In English
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London)
காலம் 6 மாதங்கள்
Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது, மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Access Programming
(Foundation Degree Programme)
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
Foundation Diploma In Nursing
(Health & Social Care)
Topup degree in UK / London
காலம் 6 மாதங்கள்
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma In Management காலம் 6 மாதங்கள்
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்கவேண்டும்

## கனிமொழி வலியுறுத்தல்



(சென்னை)

''அகதிகளாக வந்த இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும்'' என்று டெல்லி மேல் சபையில் கனிமொழி எம்.பி. வலியுறுத்தினார்.

இதுகுறித்து டெல்லி மேல் சபையில் கனிமொழி எம்.பி. உரையாற்றுகையில்,

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற இன மோதல்கள் காரணமாக ஏராளமான தமிழர்கள் இந்தியாவிற்கு அகதிகளாக வந்தனர். தற்போது தமிழகத்தில் உள்ள 114 முகாம்களில் 73 ஆயிரத்து 74 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ளனர்.மேலும், 32 ஆயிரத்து 240 பேர் தனியாக தங்கியுள்ளனர். முகாம்களில் உள்ள தமிழர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான பணம், உடை, உணவு ஆகியவற்றை மத்திய அரசின் உதவியோடு தமிழக அரசு அளித்து வருகிறது. அகதிகளுக்கான வரைமுறைகள் குறித்த 1951 ஆம் ஆண்டு ஐ.நா.சபை இயற்றிய தீர்மானத்தின் கீழ் இந்தியா செயல்பட்டு வருகிறது. அவர்களின் வருகை, தங்குதல் மற்றும் வெளியேறுதல் ஆகியவை 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் நடைபெற்று வந்தது.

தற்போது 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதியிட்ட மத்திய அரசின் அரசாணை 370 இன்படி, இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு 1993 ஆம் ஆண்டிற்கு பின் தற்போது வரை வந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்கான சட்ட விதிகளின் கீழ் உட்படுத்தப்படுகிறார்கள்.

1983 இற்குப் பின்னர் வந்தவர்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். எனவே, மத்திய அரசு ,இலங்கை அகதிகள் தொடர்பாக உரிய விதிமுறைகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் தேவையற்ற சட்ட பிரச்சினைகள் தவிர்க்கப்படும் என நினைக்கிறேன்.

இதற்கான கெடு திகதியை மேலும் நீடிக்க வேண்டும்.ஏனெனில் இலங்கையில் இருந்து அகதிகள் வருவது தொடர்ந்து நீடித்து வருகிறது. மேலும், இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும்.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி ஏற்கனவே வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையில் இருந்து அகதிகளாக வருகை தந்தோர் அவர்களது சொந்த நாட்டில் வாழ்ந்த காலத்தைவிட தற்போது தமிழகத்தில் அதிக காலம் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறு கனிமொழி எம்.பி. தெரிவித்தார். (ஓ-6)

## சென்னையில் தமிழறிஞர்கள் பார்வைக்கு தமிழ்த்தாய் சிலை

(சென்னை)

சென்னையில் தமிழறிஞர்கள் பார்வைக்காக தமிழ்த்தாய் சிலை வைக்கப்படுகிறது. இதில் திருத்தங்கள் இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக் கட்டளை சார்பில் தமிழ்த் தாய்க்கு வெண்கல சிலை அமைக்கும் பணி நடந்துவருகின்றது. சுவாமி மலை குபேரன் சிற்பக் கலைக் கூடத்தில் இந்த சிலையின் முன்மாதிரி மெழுகில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மெழுகு சிலையில் தமிழ் அறிஞர்கள் திருத்தங்களை தெரி வித்தால் அதனை திருத்திக் கொள்வதற்காக சென்னையில் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

இந்த சிலை 7ஆம் திகதி ஐம்பொன் சிலையாக வார்க்கப்படுகின்றது.

பின்னர் தமிழக அரசின் அனுமதி பெற்று கோவையில் நடை பெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு முன்னதாக சென்னையில் இருந்து புதுச்சேரி வழியாக கோவை வரை தமிழ்த்தாய் சிலை அலங்கார ஊர்தியில் ஊர் வலமாக எடுத்துச் செல்லப் படவுள்ளது. (ஓ-6)

## தமிழக மீனவர்கள் பிரச்சினைக்காக இராமேஸ்வரத்தில் மார்க்சிஸ்ட் மாநாடு

(இராமநாதபுரம்)

மீனவர்களின் பிரச்சினைக்காக இராமேஸ்வரத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி மார்க்சிஸ்ட் மாநாடு நடக்கவுள்ளது.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தவும் இந்நாட்டு மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபடவும் , கடற்கரை மேலாண்மை சட்டம் வாபஸ் மற்றும் இராமேஸ்வரம் மீன்பிடித் தொழில் பாதுகாப்பை வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் சார்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி நாகை-இராமேஸ்வரம் வரை கடற்கரை மாவட்டங்களில் பிரசார பயணமும், தொடர்ந்து 18 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் மாநாடும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் மாநில நிர்வாகிகள் , மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில செயலாளர் கருணாநிதி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஓ-6)


### ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 01 1947



இறப்பு 05 12 2008

அமரர் திரு. தணிகாசலம் ஜெயநாதன்

(கமக்கார மாளிகை, உழவர் களஞ்சியம் உரிமையாளர்)

அப்பாவே!
கடந்து போகும்
காலங்களிலும்
கலைந்து போகாத- உங்கள்
நினைவுகளோடு...
ஆண்டொன்றுதனில்
கனவில் மலர்ந்த
கதைகள் பல
கனவாகவே போன
காட்சிகள் பல பல...
வாரத்தில் வரும் நாளாகிய-
அந்த வெள்ளி நாள் எமக்கு
கரிநாள் ஆகுமென நினைக்கவில்லை
அந்த வெள்ளிதான் காலனாவான்
உம்மைக் காவு கொள்ள காத்திருந்த
கெடு நாள் என்பது புரிந்துவிட்டது.
எதை இழக்கக் கூடாதோ
அதை இழந்து... எல்லாம் இழந்த
சருகுகளாக அலைகின்றோம்.
கள்ளமில்லாத வெள்ளைச் சிரிப்பாக
பொங்கும் அந்தக் கடல் நுரையில்
ஒரு திவலையாக - அதில்
நாம் என்றும் ஒன்றித்
தவமிருப்போம் அப்பாவே...!

இணுவில் கிழக்கு,
இணுவில்.

-குடும்பத்தினர்.

(4132)


# இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் விளையாட தடை விதிக்க முடியாது

## மதுரை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(மதுரை)

இலங்கை கிரிக்கெற் அணி இந்தியாவில் விளையாட தடை கோரிய மனுவை மதுரை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இலங்கை கிரிக்கெட் அணி கடந்த மாதம் 16 ஆம்திகதி முதல் இந்தியாவில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. மேலும் 5 ஒருநாள் போட்டிகளும், 20-20 போட்டிகளும் நடக்கவுள்ளன. இந்த நிலையில் மதுரை லேக் ஏரியாவைச் சேர்ந்த உயர் நீதிமன்ற வக்கீல் ஏ.ஜோயல் பவஸ் அந்தோனி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் பொது நல வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், "கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறலில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. போராளிகளை அழிப்பதாக கூறி இலட்சக்கணக் கான தமிழர்களை அந்த நாட்டு இராணுவத்தினர் கொன்று குவித்துள்ளனர். எனவே இலங்கை அணி இந்தியாவில் நடைபெறும் போட்டி களில் கலந்துகொள்ள தடை விதிக்க வேண்டும்'' என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் டி. முருகேசன், எஸ். நாகமுத்து ஆகியோர் முன்பாக கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில் சட்டத்தரணி பி.எஸ்.ராமன், மத்திய அரசு சார்பில் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கே.கே.செந்தில்வேலன், மத்திய அரசின் சட்டத்தரணி காடுபட்டி கருணாகரன் ஆகியோர் ஆஜராகி வாதாடினார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில்" இலங்கை அணியை இந்தியாவில் விளையாட அனுமதிப்பது குறித்து மத்திய அரசு தான் கொள்கை அளவில் முடிவு எடுக்கவேண்டும்.

உள்நாட்டு பாதுகாப்பு, வெளியுறவு கொள்கை, சர்வதேச ஒப்பந்தம் போன்ற விவகாரங்களில் நீதிமன்றம் தலையிடக் கூடாது என்று மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இலங்கை அணியை இந்தியாவில் விளையாட அனுமதிப்பது குறித்து விஷயம் வெளியுறவுக் கொள்கையின் கீழ் வருகிறது. எனவே இந்த விஷயத்தில் நீதி மன்றம் தலையிடமுடியாது" என்று கூறியுள்ளனர். (ஓ-6)

# 9 மாணவ, மாணவிகள் பலியான விபத்து

# குழந்தைகளை காப்பாற்றுவதற்காக உயிர் தியாகம் செய்த ஆசிரியை

## நெஞ்சை உருக்கும் தகவல்கள்

(வேதாரண்யம்)

வேதாரண்யம் அருகே பள்ளிக்கூட வான் குளத்தில் மூழ்கியதில் 9 மாணவ, மாணவிகளும், ஆசிரியை ஒருவரும் பலியானார் கள். இந்த விபத்து பற்றிய மேலும் பல உருக்கமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

வேதாரண்யம் பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் வீதிகள் சேறும், சகதியுமாகக் காணப்படு கின்றன. விபத்தில் சிக்கிய வான் வந்து கொண்டிருந்த வீதியும் மேடு பள்ளமாக சகதியாக இருந்துள்ளதது.

வான் சாரதி செல்போன் பேசியபடி வானை ஓட்டியதால், சகதியான வீதியில் வான் வழுக்கியபடி நிலை தடுமாறி ஒரு மரத்தில் மோதி பின்னர் குளத்துக்குள் பாய்ந்து விட்டது.

வான் தண்ணீருக்குள் மூழ்கிய போது அதன் கதவுகள் மூடப்பட்டிருந்தன. இதனால் உள்ளே சிக்கிய ஆசிரியை, கிளீனர் மற்றும் குழந்தைகள் வெளியே வரமுடியாமல் தவித்தனர்.

பின்னர் கிளீனரும், ஆசிரியையும் வான் கண்ணாடிகளை உடைத்து வெளியே வந் தனர். ஒவ்வொரு குழந்தையாக வெளியே வீசினர். கடைசிக் குழந்தையை தூக்க ஆசிரியை முயற்சித்த போது அந்தக் குழந்தை 15 அடி ஆழத்துக்குச் சென்றது.

அப்போது அந்தக் குழந்தையைக் காப்பாற்றும் முயற் சியில் சுகந்தி ஈடுபட்டார். அவருக்கு நீச்சல் தெரியாது. ஆனாலும் தண்ணீருக்குள் மூழ்கிச் சென்று குழந்தையை தூக்கிவர முயன்றார். இதில் தோல்வி அடைந்த அவர் தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டார். அவருடைய முயற்சியால் 11 குழந்தைகள் உயிருடன் காப்பாற்றப்பட்டனர். ஆனால் ஆசிரியை சுகந்தி தனது உயிரைத் துச்சமாக மதித்து உயிர்த்தியாகம் செய்து விட்டார்.

சாரதி மகேந்திர னும் முதலில் குழந்தைகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டாராம்.

ஆனால் நிறையக் குழந்தைகள் இறந்ததைப் பார்த்தும் ஊர் மக்கள் தன்னை அடித்துக் கொன்றுவிடுவார்கள் என்று பயந்து போய் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது. உயிர்த் தியாகம் செய்த ஆசிரியை சுகந்தி பட்டதாரி ஆவார். (ஓ-6)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

70

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் மணக்குடவர் முதலிய பத்து அறிஞர்கள். அவர்களுள் புகழ்பெற்றவர் பரிமேழகர். வடமொழி நூல்களின் கருத்துக்களைத் தழுவியும் ஒப்பிட்டும் உரை எழுதும்போக்கு உடையவர் அவர். அதனால் சில இடங்களில் நூலாசிரியரின் உண்மைக் கருத்தை உணர முடியாமல் போயினும், பல இடங்களில் திருக்குறளின் பொருளாழத்தையும் நயத்தையும் நன்கு புலப்படுத்தியவர் அவர்.

பரிமேலழகர்(பதினான்காம் நூற்றாண்டில்) இரண்டு பழைய நூல்களுக்கு உரை எழுதியவர். பரிபாடல், திருக்குறள் என்பன அவருடைய உரை பெற்ற இரண்டு நூல்கள். திருக்குறளுக்கு எழுதிய உரையாலே அவர் புகழ் பெற்று விளங்குகிறார். தமிழில் உள்ள உரையாசிரியர்களுள் அவரே மிகச் சிறந்தவர்.

அவர் வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிப் புலமையும் நிரம்பியவர்; நுட்பமாகப் பொருளுணர்ந்து ஆழ்ந்து சிந்தனை செய்து அரிய கருத்துக்களை எல்லாம் விளக்குவதில் வல்லவர். அவருடைய திருக்குறள் உரையிலும் சில சிறு குறைகள் உள்ளன. ஆயினும் அவர் ஆழ்ந்து கண்டு உணர்த்தியுள்ள நயங்களும் நுட்பங்களும் கணக்கற்றவை. ஓரிடத்தில் கூறியதை மறுபடியும் கூறாத செறிவும், உணர்த்தும் பொருளுக்கு ஏற்றபடி சொற்களை வரையறுத்து நிறுத்தி எழுதும் திறனும் அவருடைய உரையின் சிறப்பியல்புகள். வேண்டாத அடைமொழிகளுக்கு இடம் தராமல், நேரிய முறையில் உரிய பொருளை விளக்குமளவிற்கே சொற்களை அளந்து பயன்படுத்துவார். செறிவு, நுட்பம், நேர்மை ஆகிய பண்புகள் அமையத் தமிழ் உரை நடையைக் கையாண்டவர் அவர். இக்காலத்து அறிவியல் (சயன்ஸ்) கருத்துக்களுக்கு ஏற்றது அவரது நடை அவருடைய திருக்குறள் உரையின் நுட்பத்திலும் செம்மையிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த சைவ சமயச் சான்றோர் உமாபதி சிவாச்சாரியார் என்பவர், உயர்ந்த தமிழ் நூல்களின் பட்டியலைத் தரும்போது திருக்குறள் ஒன்றாகவும் பரிமேலழகர் உரை மற்றொன்றாகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார். பதினேழாம் நூற்றாண்டில் இருந்த திருமேனி இரத்தின கவிராயர் என்பவர் அவருடைய உரையில் உள்ள அரிய கருத்துக்களை விளக்கி "நுண்பொருள் மாலை" என்ற தனி நூலையே இயற்றினார்.

பெயர் அறியப்படாத அறிஞர்களின் உரைகள் வேறு சில இலக்கிய நூல்களுக்கு அமைந்தன. மயிலைநாதர், கல்லாடர், தெய்வச்சிலையார் முதலியவர்கள் இலக்கண நூல்களுக்கு உரை எழுதியவர்கள்.

பொதுவாக, இந்த உரையாசிரியர்களின் நடை எல்லாம் வடசொல் குறைவாகக் கலந்த நடை அல்லது தூய தமிழ் நடை என்று கூறுமாறு உள்ளன. ஆயின், ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரை எழுதியவர்கள், வடசொற்களும் தமிழ்ச்சொற்களும் விரவிக் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதினார்கள். (முத்தும் பவளமும் கலந்த மாலைபோல் தமிழும் வடமொழியும் கலந்த நடை என்னும் பொருளில் அந்த நடைக்கு மணிப்பிரவாளம் என்ற பெயர் வழங்கினார்கள்).

பக்திப் பாடல்களின் பொருளாழத்தையும் பலவகை நயங்களையும் விளக்குவதில் அவர்களின் உரைகள் நிகரற்று விளங்குகின்றன. அவர்கள் கல்வி வல்ல அறிஞர்களாக மட்டும் நிற்காமல், சமயத்துறையில் ஈடுபட்டுத் தம்வாழ் வைத் தியாகம் செய்த சான்றோர்களாகவும் வாழ்ந்தமையால் அவர்களின் உரைகள் சாத்திர நூல்கள் போல் வைணவ அறிஞர்களால் அளவற்ற பக்தியுடன் போற்றப்படுகின்றன.

வடமொழி இதிகாசங்களையும் சைன சமய நூல்களையும் தழுவித்தமிழில் நூல்கள் இயற்றப்பட்ட இக்காலத்தில், புலவர்கள் வீரம் பற்றியும் காதல் பற்றியும் தனித்தனி பாடல்கள் பாடும் வழக்கம் குன்றியது. வட நூல்களிலிருந்து கதைகளையும் வருணனைகளையும் கடன் வாங்கும் பான்மை வளர்ந்தது. வாழ்க்கையில் உள்ளவற்றைப் பாடும் மரபைக் கடந்து இல்லாதவற்றைக் கற்பனை செய்து பாடும் புதுமை வளர்ந்தது.

வட நூல்களின் கதைகளையும் மரபுகளையும் மட்டும் அல்லாமல், வடமொழிச் சொற்களையும் மிகுதியாகக் கையாளத் தொடங்கினார்கள். சிறப்பாக, சமயத் தொடர்பான வாதங்களையும் கருத்துகளையும் எடுத்துரைக்குமிடத்தில் வடமொழிச் சொற்களைத் தயங்காமல் கலந்தனர். மணிமேகலையின் சமயவாதம் நிகழும் பகுதியிலேயே இதன் தொடக்கத்தைக் காணலாம். சைனர் வடமொழி நூல்களைத் தழுவி எழுதியவற்றில் வடசொல் கலப்புப் பெருகியது. ஸ்ரீபுராணம் என்னும் சைனநூலின் நடையே ஒருவகைக் கலப்பு நடையாக அமைந்தது.

தமிழ்ச்சொற்களும் வடமொழிச் சொற்களும் பாதிக்குப் பாதி கலந்தாற்போல் அமைந்த அந்த நடையை வேண்டுமென்றே சமயச் சார்புள்ள புலவர்கள் போற்றத் தலைப்பட்டார்கள். ஆனால் இலக்கியமே நோக்கமாகக் கொண்டு கற்று உரைநூல்கள் எழுதிய அறிஞர்கள் ஏறக்குறைய அதே காலத்தில் வாழ்ந்த போதிலும் அந்த மணிப்பிரவாள நடையில் எழுதவில்லை. மிகக் குறைந்த அளவில் ஒருசில வடசொற்கள் மட்டுமே கலந்து செந்தமிழ் நடையிலேயே அவர்கள் தம் உரைகளை எழுதினார்கள். இளம்பூரணர், குணசாகரர், மயிலைநாதர் முதலானவர்கள் சைனர், பேராசிரியர், நச்சினார்க்கினியர்,

**பேராசிரியர் மு.வரதராசன்**

அடியார்க்கு நல்லார் முதலானவர்கள் சைவர். பரிமேலழகர் வைணவர். இவர்கள் எல்லோரும் சிறந்த தமிழ்த் தொண்டு புரிந்த அறிஞர்கள்; இலக்கண இலக்கியத்துறையில் சேர்ந்தவர்கள்.

இவர்கள் எல்லோரும் மேற்குறித்த அறிஞர்களைப் போல் மணிப்பிரவாள நடையில் எழுதாமல், செந்தமிழ் நடையையே கையாண்டார்கள். திட்பநுட்பம் வாய்ந்த பழைய தமிழ் உரைநடைக்கு எடுத்துக் காட்டாக உள்ளவை இவர்களின் உரைகளே. (தொடரும்)

## இந்தோனேஷிய கடற்படை அச்சுறுத்தல் இலங்கை அகதிகள் முறைப்பாடு

(கொழும்பு)

இந்தோனேஷிய கடற்படையினரால் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக இலங்கை அகதிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முனைந்த இலங்கையைச் சேர்ந்த 250 படகுப் பயணிகள் தற்போது இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் தஞ்சமடைந்துள்ளனர்.

படகில் தஞ்சமடைந்துள்ள தம் மீது இந்தோனேஷியக் கடற்படையினர் அச்சுறுத்தல் விடுப்பதாக படகுப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆயுதங்களுடன் வந்த சில கடற்படையினர் தம்மை மிரட்டியதாகவும், இது தொடர்பான படங்களை எடுக்க முற்பட்ட போது கடற்படையினர் குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவிற்குள் தஞ்சமடைந்தால் தமக்கு அடைக்கலம் வழங்குவதற்கான நடைமுறையில் காலதாமதம் ஏற்படக்கூடும் எனவும், அதனைத் தடுப்பதற்காகவே தாம் தொடர்ச்சியாக படகில் சரணாகதி அடைந்துள்ளதாகவும் குறித்த இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர். (6)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக முக்கியஸ்தர் இடம்பெயர் முகாமில் வைத்து கைது

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் இடம்பெயர் முகாமில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்காக குறித்த நபர் 70 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக அவ்வூடகம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபரிடம் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது என பொலிஸார் அறிவித்துள்ளதாகவும் இடம்பெயர் முகாம் ஒன்றிலிருந்து இந்தியா சென்று அங்கிருந்து பிரான்ஸ் செல்ல இவர் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (6)

## அமைச்சர், பா.உறுப்பினர் உள்ளிட்ட நான்கு ஆளும்கட்சி முக்கியஸ்தர்கள் எதிர்க்கட்சிகளுடன் இணையத் திட்டம்

(கொழும்பு)

அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நான்கு ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு ஒன்றின் மூலம் சர்வதேச புகழை ஈட்டிக் கொடுத்த ஓர் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சில அமைச்சர்கள் இவ்வாறு ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, குருணாகல் மாநகர சபையின் பிரதி மேயர் அசோக அபேசிங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)



யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியின் கலைமாணி இறுதியாண்டு மாணவர் ஒன்றியத்தினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாணவர்களுடன் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# தமிழ் மக்கள் மீதான திடீர் கரிசனை தேர்தலை நோக்காகக் கொண்டது

## விக்ரமபாகு கருணாரட்ண



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ் மக்கள் மீது திடீர் அக்கறையும் அன்பும் ஏற்பட்டுள்ளதாகக் கூறும் இடதுசாரி முன்னணி அந்த அக்கறையும் அன்பும் தேர்தலை நோக்காகக் கொண்டதேயன்றி உண்மையானதல்ல எனவும் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் எமக்கும் உன்பாடு உண்டு.ஆனால், அதன்மூலம் மாத்திரம் ஜனநாயகம் மலரப்போவதில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்துடன் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அதன்மூலமே அனைத்து மக்களும் ஐக்கியத்துடன் வாழும் ஜனநாயகம் மலரும் என்று இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.நிப்போன் ஹோட்டல் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

இது தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது, ஜனாதிபதித் தேர்தலை அறிவித்ததும் அரசாங்கம் அவசர அவசரமாக முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த்துகின்றது. அம்மக்களை சுதந்திரமாக நடமாடுவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறுகிறது.

வன்னிப் பகுதியில் பெருந்தொகையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த்த முடியாது. அப்பகுதியில் முழுமையாக மிதிவெடிகளை அகற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் பின்னரே அம்மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவோம் என அரசாங்கம் கூறியது.

ஆனால், தற்பொழுது அம்மக்களை சுதந்திரமாக நடமாட அனுமதிப்பதாகவும் ஜனவரி மாதத்திற்குள் அனைத்து முகாம் மக்களையும் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதாகவும் அரசாங்கம் கூறியிருப்பதானது அவர்களுடைய அரசியல் சுய இலாபத்தை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

அதேபோன்று ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கும் தமிழ் மக்கள் மீது திடீர் கரிசனை ஏற்பட்டுள்ளது.முகாம்களில் உள்ள மக்களை பெரும் அவதியுறுவதாகவும் அவர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காமையானது மிகவும் கவலையளிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். எனவே, இவர்களின் திடீர் கரிசனையின் காரணத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் 1988, 1989 காலப் பகுதிகளில் பெருந்தொகையான இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணீர்வடித்து அதற்கெதிராக போராட்டத்தை நடத்திய மஹிந்த ராஜபக்ஷ, இன்று காணாமல் போனோர் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் இருக் கின்றார்.

இவ்வாறு சிங்கள இளைஞர்களுக்கு ஒரு முகமும், தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஒரு முகமும் காட்டியவர்கள் தமிழ் மக்கள் மீது திடீர் கரிசனை காட்டுகிறார்கள்.

ஆனால், நாம் அப்படி யல்ல. அன்று சிங்கள இளைஞர்கள் கொல்லப் பட்டபோதும் அதற்கெதிராகப் போராடினோம். அதேபோன்று தான் தமிழ்இளைஞர்கள் -யுவதிகள் கொல் லப்பட்டதற்கும் எதிராகப் போராடி வருகின் றோம்.

ஜே.வி.பி.யி னருக்கு எதிராக அடக்கு முறையினை பிரயோகித்த காலங்களிலும் அதற்கெதிராக நாம் போராடினோம். அதன் மூலமாகவே விமல் வீரவன்ச போன்றவர்களை நாம் பாதுகாத்தோம்.

அதேபோன்று லசந்த விக்ரமசிங்க போன்ற ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். பலர் தாக்குதலுக்குள்ளானார்கள். இவற்றுக்கெல்லாம் நாம் பொறுப்பல்ல என அண்மையில் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

அப்படியென்றால் அதற்கு யார் பொறுப்பு என நாம் மஹிந்தவிடம் கேள்வி எழுப்புகின்றோம்.

அதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல் போன்ற செயல்களின் பின் புலத்தில் யார் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். அதற்கான ஆதாரங்களும் உள்ளன.

எனவே, இவ்வாறானவர்களுக்கு வாக்களிப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை என்றார். (ஓ-6)

# "மரணித்த மனிதம்" கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

செல்வன் மு.ஆ.சுமன் எழுதிய " மரணித்த மனிதம்" என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வல்வை அ.மி.த.க. பாடசாலையில் வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் எஸ். சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக வல்வை அ.மி.த.க.பாடசாலை அதிபர் பு.சக்திவேல், சிதம்பராக் கல்லூரி அதிபர் எஸ். மகேந்திரன், வல்வை மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பா.நகுலாம்பிகை, வல்வை றோ.க. பாடசாலை அதிபர் நா.கண்ணதாஸன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நூல் வெளியீட்டுரையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் வழங்கவுள்ளதுடன், மதிப்பீட்டுரை அம்பன் அ.மி.த. பாடசாலை ஆசிரியர் சு.குணேஸ் வரன் வழங்கவுள்ளார். நூலின் முதற்பிரதியை வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ஓ-4)

# அம்பாந்தோட்டையில் சூரியசக்தி மின்நிலையம்

(கொழும்பு)

நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 400 கிலோ வாற் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய நிலையமொன்றை . அம்பாந்தோட்டை பருத்தன் கந்தப் பகுதியில் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். இத்திட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கம் 175 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. (ஓ-6)

## பொதுத் தேர்தலின் போது

# கம்பஹா மாவட்டத்தில் பசிலுக்கு எதிராக விமுக்தி குமாரதுங்க போட்டி?

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல்களின் பொதுமுன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் புதல்வர் விமுக்தி கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட பிரதான அமைப்பாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக விமுக்தி குமாரதுங்க எதிர்வரும் பொதுத் தேர்தல்களின் போது ஐக்கிய தேசிய முன்னணி கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கூப்படுகிறது.

விமுக்தி குமாரதுங்க தற்போது இங்கிலாந்தில் மிருக வைத்தியராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசிலுக்கு தகுதிபெற்ற யா/ மாரீசன்கூடல் றோ.க. த.க. பாடசாலை மாணவன்



கிறேசியன் ஜெனோஷன்

அவர்களையும் 80 புள்ளிகளிற்கு மேல் பெற்றுச் சித்தி பெற்ற மாணவர்களான,

அ:ரூபகன் - 134 , ஜெ:அ:டிலக்சன் - 128, ஜெ:டினோஜன் - 118, ஜெ. யூட்கனிஸ்ரன் - 110, த.அஜித் - 110, செ.அனோஜன் - 104, பி:றோன்கனிஸ்ரன் - 94, பெ.வில்பினிப்பினா - 92

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களை ஆரம்பம் முதல் வழிநடாத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை,
இளவாலை.

(4125)


# ஜனநாயக விரோத அரசை வீட்டுக்கு அனுப்பவே 16 அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இணைவு

## ஐ.தே.க.பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஜனநாயக விரோத அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காகவே 16 அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்துள்ளன. பொது வேட்பாளர் சரத் பொன் சேகாவுடனோ அல்லது எம்முடன் இணைந்துள்ள ஏனைய கட்சிகளுடனோ எதுவித இரகசிய ஒப்பந்தங்களும்செய்து கொள்ளப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட எம்.பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்திலுள்ள பல அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் எம்மோடிருந்து வெளியேறியவர்களில் பலர் இன்று எம்மோடு இணைவதற்கும் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்த வகையில் அடுத்த வாரம் அரசாங்கத்திற்கு அதிர்ச்சி தரும் வாரமாகவே அமையப் போகிறது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு இவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஜனநாயக விரோத அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் ஒரே நோக்கத்திற்காகவே அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்துள் ளன.

ஜே.வி.பி.க்கும் எமது கட்சிக்குமிடையே எந்த விதமான அரசியல் ரீதியான உடன்பாடுகளும் கிடையாது. எமது கட்சியின் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானது ஜே.வி.பி.யின் கொள்கைகளாகும். ஆனால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக பொதுவேட்பாளரை வெற்றி பெறச் செய்வதற்காக ஓரணியில் நாம் திரண்டுள்ளோம்.

அத்தோடு பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் எதுவிதமான இரகசிய உடன்படிக்கைகளும் செய்து கொள்ளப்படவில்லை. ஆனால் இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் அடிப்படை வசதிகளுடன் குடியேற்றுவதை துரிதப்படுத்தல் ,கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விசாரணை செய்து நீதியின் முன் நிறுத்துதல், சிறு குற்றங்களை செய்தவர்களை விடுதலை செய்தல், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் மட்டும் அவசரகாலச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல், தகவல் பரிமாற்றல் சுதந்திரம், மனித உரிமைகளை பாதுகாத்தல், பத்திரிகை சபை சட்ட மூலத்தை இரத்துச் செய்தல், சுயாதீன ஆணைக் குழுக்களை நியமித்தல், அரசியலமைப்பு சபைக்கு உடனடியாக அங்கீகாரத்தை வழங்கல், நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பொது வேட்பாளருடன் இணக்கப்பாடு கண்டுள்ளோம்.

இந்த இணக்கப்பாடுகளை ஜெனரல் சரத்பொன்சேகா தலைமையில் மக்கள் முன்பாக சமர்ப்பிக்கவுள்ளோம். கடந்த காலங்களில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் வெற்றுப்பத்திரங்களாக தூக்கியெறியப்பட்டதை நாம் கண்டுள்ளோம்.

எனவே இரகசிய ஒப்பந்தமென்ற குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதுவரையில் எம்மோடு பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை. தமிழ் மக்கள் தாம் சந்தித்த துயரங்களை நன்கறிவார்கள். எனவே ஐ.தே.கட்சியை ஆதரிப்பார்கள் என்பதில் நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்றார். (ஓ-6)


கல்வியாண்டு-2010

பிரத்தியேக, குழு வகுப்புகள்
யாழ் மண்ணின் தலைசிறந்த ஆசிரியர் குழு.
ஆரம்பம் 05-12-2009/ 06-12-2009 இல்

தமிழ்மொழியும் இலக்கியமும் திரு. நவநீதகிருஷ்ணன்
கணிதம் திரு. சுரேஸ்
விஞ்ஞானம் திரு. திலீபன்
வரலாறு (தரம் 10/11) திரு. றொபின்சன்
வரலாறு, புவியியல், குடியுரிமை திரு. கோகிலன்
ஆங்கிலம் திரு. ரமணதாசன்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (தரம் 10/11) திரு. பிரணவன்
அடிப்படை கணினிக் கல்வி(தரம் 06 - 09) திரு. வினோ

IECE 121/1 அரசடி வீதி, கந்தர்மடம்
TP:- 021 222 7845



விசேட கல்விப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கைதடி நவீல்ட் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி ஜனசக்தி முகாமையாளர் பே.அருள்பிரகாசம் முகிழ்நிலை ஆசிரியர் என்.கோபுவுக்கும், பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் முகிழ்நிலை ஆசிரியர்களான செல்வி பிரியகாசினி, மதனரூபன் ஆகியோருக்கும் பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பதையும், சான்றிதழ்களைப் பெற்ற முகிழ்நிலை ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை விரைவில் விஸ்தரிக்கப்படும்

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டம் முழுவதும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையை விரைவில் விஸ்தரித்து யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் உன்னத சேவை வழங்கப்படும் என சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

முதலாம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இவ் அமைப்பு அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண நகரத்தில் மட்டும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையை மட்டுப்படுத்தாமல் பிராந்திய ரீதியாகவும் யாழ்.மக்களுக்கு சேவையை வழங்க வேண்டியுள்ளது.

இலங்கையில் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் அம்புலன்ஸ் சேவை முழுமையாக வழங்கப்படவில்லை.ஆனால் யாழ்ப்பாணத்தில் பயிற்சி நிலையங்கள் அமைத்து சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பயிற்சி நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் நிறுவப்பட்டு சேவையை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

ஜொனிற்றா நிறுவனம் சுனாமி காலப் பகுதியில் தான் இலங்கைக்கு வந்தது. தற்போது யுத்தம் முடிவுற்ற நிலையில் வடக்கின் வசந்தம் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.எனவே நாம் யாழ்ப்பாண அபிவிருத்தியில் எமது சேவையை வழங்கி அபிவிருத்திக்கு நாம் உதவுவோம்.

யாழ்.குடாநாடு முழுவதற்கும் ஒரே ஒரு அம்புலன்ஸ் தான். யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸிடம் உள்ளது.

இதன்மூலம் யாழ்.போதனா வைத்திய சாலையை அண்மித்துள்ள பிரதேசங்களில் மட்டுமே சேவையை வழங்கக் கூடியதாக இருப்பதாக பத்திரிகையாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கையில்,

சகல பிரதேசங்களுக்கும் பகிர்ந்து நிதி வழங்கப்படும் வேளை யாழ். மாவட்டத்திற்கான நிதிப்பற்றாக்குறையாக உள்ளது. எனினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வவுனியா முகாம்களில் வன்னி மக்களை தங்கவைப்பட்ட வேளை அவர்களுக்கான சேவையை வழங்குவதற்கு 5 அம்புலன்ஸ் வழங்கப்பட்டது. இந்நிலையில் யாழ்ப்பாண மக்களின் சேவைக்கு அதிகமான அம்புலன்ஸ் வழங்கப்பட வேண்டியுள்ளது.இது தொடர்பாக தலைமைச் செயலகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அவ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் ராஜா சின்னத்துரை, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சர்வதேச இணைப்பாளர் ஜென்ஸ்வால், இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் விஜயசூரிய மற்றும் யாழ். மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பினர் எஸ்.செல்வரஞ்சன், எஸ். ஈழநேசன், எ.லக்ஸ்மன், ரிசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ-7)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12, 13 இற்கு அரசியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு குறித்த பாட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

# பாலர் கல்விக் கழகத்தின் வருடாந்த கலை விழா

(யாழ்ப்பாணம்)

14 பாலர் பாடசாலைகள் இணைந்த பாலர் கல்விக் கழகம் நடத்தும் 44 ஆவது வருடாந்த கலை விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத் தலைவரும், சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியருமான எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் பொ. மகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-9)

# ஸ்ரீ சாரதாதேவியின் 157 ஆவது ஜயந்தி

(யாழ்ப்பாணம்)

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 157 ஆவது ஜன்மதின நிகழ்வு எதிர்வரும் 8 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளில் காலை 5.30 மணிக்கு மங்கல ஆரத்தியும், 12 மணிக்கு விசேட பூஜையும், பிரசாதம் வழங்கலும் அன்னையைப் பற்றிய மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

பரு.சாரதா சேவாச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டு இம் மாதம் 31 ஆம் திகதியுடன் 40 ஆண்டுகள் நிறைவடைவது குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

யாழ்.செய்திகள்

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் சிறுவர் உலகம் கல்வி நிலையத்தில் 4ஆவது கலை விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எவர்சைன் கல்வி நிலைய இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா யாழ்.இந்துக் கல்லூரி பிரதி அதிபர் போ.சிறிகந்தராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

# பேராசிரியர் கைலாசபதி நினைவு நிகழ்வு

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையினரால் நாளை மறுநாள் திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கைலாசபதி நினைவு நிகழ்வு நடைபெறவுள்ளது.தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் நினைவுரையை துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் நிகழ்த்தவுள்ளார்.

மேலும் கவிஞர் சோ.பத்மநாதன் நவீன "தமிழ்க் கவிதைகள்" எனும் பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

# புண்ணிய கிராமிய வேலைத்திட்ட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் தென் மராட்சிப் பிரதேச புண்ணிய கிராமிய வேலைத்திட்ட செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் சந்திர ராஜினி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருதினராக தென் மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்ததா கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் சிறப்பு நிகழ்வுகளாக நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர் க.க.ஈஸ்வரன் "மனித நேயமும் அற விழுமியங்களும்" என்னும் பொருளிலும், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்னும் விடயம் பற்றியும், கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஸ்தாபகர் சைவப்புலவர் சு.சுமுகலிங்கம் "இன்றைய சமுதாயத்திற்கு அறநெறி அவசியம்" என்னும் தலைப்பிலும் யாழ்ப்பாணம் உளவளத் துணையாளர் ஜே.பார்த்தீபன் "உளசமூக நன்னிலை" என்னும் பொருளிலும் தமிழாசிரியர் த.நாகேஸ்வரன் "இந்து தர்ம பாரம்பரியம்" என்னும் விடயம் பற்றியும் உரை நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-4)

# நத்தார் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்ட நத்தார் நிகழ்வுகள் யாழ் ஸ்ரேஷன் வீதியில் அமைந்துள்ள பரிசுத்த திருத்துவ சபையில் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக சபை மூப்பரும் விசுவாசிகளும் அறிவித்துள்ளனர். (ஓ)

# ஆதரவற்ற மூத்த பிரஜைகள் நலன்பேண் உதவித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அறவழிப் போராட்டக் குழுவினால் ஆதரவற்ற மூத்த பிரஜைகள் நலன் பேண் உதவித்திட்டம் கனடாவில் வாழ்கின்ற தென் மராட்சி அன்பர்களின் ஆதரவுடன் அமுலாக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சியிலுள்ள கிராமங்களில் வசிக்கினற 70 வயதிற்கும் மேற்பட்ட 65 பெண்களும் 35 ஆண்களும் உள்ளடங்கலாக 100 மூத்த பிரஜைகளுக்கு ஒவ்வொருக்கும் தலா 1000 ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு அறவழிப் போராட்டுக் குழுத் தலைவரும் யாழ் மாவட்ட மூத்த பிரஜைகள் சம்மேளத்தின் ஆலோசகருமான வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச சமூக சேவைகள் திணைக்கள அதிகாரி எஸ்.வரதபாஸ்கரன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக முன்னாள் பனை அபிவிருத்தி சபை தலைவர் க.நடராசா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி ப.நோ.கூ.சங்க தலைவர் க.ராஜராம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# Western Provincial Department of Education

# G.C.E. (O/L) EXAMINATION - 2009

# Model paper - English Language

## Part - II

**Test 14**

You have ordered two books from a book shop last month. You have paid the money by cheque or postal order to the shop and instructed the books to be sent by post. But you have not yet received them.

Write a letter to the manager explaining the situation. Use about 150 words.

Include –titles and authors of the books
- date you placed the order
- amount you paid and the mode of payment
- what you want the manager to do

(Marks: 10, Time :20 mts)

**OR**

You heard that one of your friends has fallen into the habit of smoking. Write a letter giving him advice.Use about 150 words.

Include – how you got the news
-harmful effects of smoking
-Ways of getting rid of the habit
-the importance of having a healthy mind and body

**Test 15**

Read the following text and answer the questions given below.

(Marks:08, Time :15 mts)

The phone rang on Dr.Sanduni's desk

" Hello" she said, picking up the phone. " Dr. Sanduni here"

" Good morning Dr.Sanduni," a voice said. " It's Dilini Gunasekara here, professor Hasitha's secretary. It's about the meeting on Monday. You are definitely coming. Aren't you?"

" The meeting? Yes of course." Dr. Sanduni said, looking in her diary. "It's at eleven I see."

"Well no. We had to change the time," Dilini Gunasekara said." It's going to be at twelve, I'm sure I told you."

" But I've a lecture at twelve," Dr.Sanduni said.

" But surely you can cancel your lecture –just once," Dilini Gunasekara suggested.

"The meeting's very important, are you know?"

" I've never cancelled a lecture in my life" Dr.Sanduni said ."Sorry!" There was silence. "However" she went on, " I've got an idea. I've just got a new cassette recorder – rather a good one. In fact, I'll record my lecture beforehand -and then I'll be able to come to the meeting"

" Wonderful ," said Dilini Gunasekara. "I'll tell professor Hasitha that you'll be there then."

At five to twelve on Monday morning Dr.Sanduni went along to the lecture room. There were about twenty students waiting there for her. "I'm Sorry" she told them. " I won't be able to give the lecture today." The students looked surprised.Dr. Sanduni explained to them that she had important meeting. " However," she went on, " although I can't be with you myself, my voice can!" She gestured towards the cassette recorder on the table. "You see, I've recorded my lecture and you can listen to it while I go to the meeting, So, in a way I'll be in two place at once! One of the miracles of modern science!" Feeling rather pleased with herself, Dr. Sanduni switched on the cassette recorder and left

The meeting on Professor Hasitha's office finished a little early, so Dr.Sanduni decided to go back to the lecture room. She stood for a moment outside the door, listening to her own voice . Then, very quietly, she opened the door. To her surprise, the room was empty. But then, as she looked around she saw a number of cassette recorders – all ' listening' to her lecture!

" Well," She thought, " If I can be in two places at once, so can they!"

1. Say whether the following statements are true or false by writing 'T' or 'F' against each sentence.

   a. The meeting was originally scheduled at eleven o' clock (.............)
   b. Dilini Gunasekara suggested that Dr.Sanduni should cancel her lecture (............)
   c. Dr. Sanduni has cancelled a lecture before (.............)
   d. Dr.Sanduni said she would record her lecture beforehand and then she could go to the meeting (,............)

   (1/2 x 4=2 marks)

2. When did Dr. Sanduni go to the lecture room on Monday?
   ..........................................................................

3. What was the reason Dr.Sanduni gave the students for not attending the lecture?
   ..........................................................................

4. What did she see when she went back to the lecture room?
   ..........................................................................

5. Write the sentence / phrases which says the students were not in the room.
   ..........................................................................

   (1X4 = 4 marks)

6. What does "it" refer to in each sentence. Find words or phrases from the text and fill in the blanks.

   (a) It was on Dr. Sanduni's desk ........................................

   (b) Dilini Gunasekara rang up about it.................................

   (c) Dr. Sanduni took it to the lecture room ............................

   (d) She placed the cassette recorder on it............................

   (1/2x 4=2 marks)

**Test 16**

Write an essay on one of the following. Use about 200 words.

(Marks:15, Time:20 mts)

(1) The members of the Social Services Club in your school successfully completed a project to prevent the spread of Dengue by cleaning the breeding places of mosquitoes.
Write a report to be presented at the Annual General Meeting of the club.
- the number of participants and the date, time etc,
- nature of work done
- help you got from the village community
- the success of the project

**OR**

(2) As the Head prefect of your school you have been asked to deliver a speech on "The importance of learning English"

Write your speech including

The role of English in
- higher education
- trade, communication, industry
- technology
- international relations and tourism
- for enjoyment

**OR**

(3) Write an article to a magazine giving your views and describing your feelings about the clothes you wear on different occasions.

..........................................................................
..........................................................................

## மேல்மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2009
# பயிற்சி வினாத்தாள் - சைவநெறி

பகுதி - I நேரம் 01 மணித்தியாலம்

கவனிக்க.

(i) சகல வினாக்களுக்கும் விடை தருக.
(ii) இலக்கம் 1 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு (1), (2), (3), (4) என்னும் விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க..
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் வட்டங்களில் விடைக்குரிய வட்டத்தினுள் (X) புள்ளடி இடுக.
(iv) அவ்விடைத்தாளின் பின்னால் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அதன்படி செயற்படுக.

01. "சுகத்தைச் செய்பவன்" என்னும் பொருளுடன் கூடிய சிவபெருமானுடைய திருநாமம்.
1. சங்கரன் 2. மாதொருபாகன்
3. கங்காதரன் 4. பசுபதி

02. "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.........." எனப்பாடியவர்,
1. சேக்கிழார் 2. தாயுமானவர்
3.அப்பர் பெருமான் 4. சுந்தரமூர்த்தி நாயனார்

03. உணவு உண்பதற்கு முன்பு நாம் ஒவ்வொருவரும் அவசியம் ஓத வேண்டிய தேவாரம்.
1. "பித்தாபிறை" 2. "அன்னம் பாலிக்கும்"
3. "யாவர்க்குமாம்" 4. "நாமார்க்கும்"

04. தாயை இழந்தவர்கள் அனுட்டிக்க வேண்டிய முக்கிய விரதம்.
1. பங்குனி உத்தரவிரதம் 2. ஆடிப்பூர விரதம்
3. சித்திரைப் பௌர்ணமி விரதம் 4. ஆடி அமாவாசை விரதம்

05. "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை.....:...." எனக்குதூகலத்துடன் பாடியவர்.
1. பாரதியார் 2. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 4. பாரதிதாசன்

06. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர்,
1. இராமானுஜர்2. நாத முனிகள் 3. மத்துவர் 4.மேற்கூறிய எவருமல்ல.

07. ஆருத்திரா தரிசனம் எனப்படுவது,
1. சிவராத்திரி 2. மார்கழித் திருவாதிரை
3. ஆனித் திருமஞ்சனம் 4. வைகாசி விசாகம்

08. "வாசிதீரவே காசு நல்குவீர்............" என வேண்டி, சமூகப்பணி செய்தவர்கள்.
1. சுந்தரரும், சம்பந்தரும் 2. சுந்தரரும், அப்பரும்
3. அப்பரும், சம்பந்தரும் 4. மணிவாசகரும், அப்பரும்.

09. "ஏடவீழ் அலங்கல் மார்பன் ..........." என வர்ணிக்கப்படும் கடவுள்,
1. முருகன் 2. சிவன் 3. வீரபத்திரர் 4. விநாயகர்

10. யாழ்முறிப் பதிகம் பாடியவர்,
1. நீலகண்ட யாழ்ப்பாணர் 2. சம்பந்தர்
3. சுந்தரர் 4. அப்பர் பெருமான்

11. சதாசிவன் எனும் பிள்ளைத் திருநாமம் கொண்டவர்.
1. யோகர் சுவாமிகள் 2. செல்லப்பா சுவாமிகள்
3. சித்தானைக்குட்டி சுவாமிகள் 4. கடையிற் சுவாமிகள்

12. "உதிக்கின்ற செங்கதிர் ..............." எனத் தொடங்கும் பாடல்,
1. அபிராமி அந்தாதியின் முதற்பாடல்
2. அபிராயம்மை பதிகத்தின் முதற்பாடல்.
3. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் முதற்பாடல்.
4. மேற்கூறிய எதுவுமில்லை.

13. மணிவாசகர் முத்தியடைந்த தினம்
1. வைகாசி மூலம் 2. சித்திரைப் பரணி
3. ஆனி மகம் 4. ஆடிச் சுவாதி

14. முதலையுண்ட பிள்ளையை மீட்டு அற்புதம் புரிந்தவர்,
1. அப்பர் 2. சுந்தரர். 3. மணிவாசகர் 4. சம்பந்தர்

15. "தென்னவன் பிரம்மராயன்" என்னும் பட்டம் பெற்றவர்,
1. பட்டினத்தடிகள் 2. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
3. மணிவாசப் பெருமான் 4. திருமூல நாயனார்

16. "கொற்றவன் குடி முதலியார்" என அழைக்கப்படுபவர்,
1. மெய்கண்ட தேவர் 2. உமாபதி சிவாச்சாரியார்
3. அருணந்தியார் 4. மறைஞான சம்பந்தர்

17. நாவலர் பெருமானது பணிகளைக் கௌரவித்து அவருக்காக முத்திரை வெளியிட்ட ஆண்டு
1. 1822 2. 1979 3. 1970 4. 1989

18. ஈரமண்ணில் பாவை உருவம் செய்து பராசக்தியை வழிபடும் வழிபாடு,
1. பாவை நோன்பு 2. நவராத்திரி
3. கேதாரகௌரி விரதம் 4. வரலட்சுமி விரதம்

19. "நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் ........" என விதந்து நாவலரின் பிறப்பின் முக்கியத்துவத்தைப் பாடியவர்,
1. சி.வை. தாமோதரம்பிள்ளை 2. பெரியதம்பிப் புலவர்
3. பண்டிதமணி கணபதிப்பிள்ளை 4. இந்து போர்ட். இராசரத்தினம் அவர்கள்

20. "அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் .........." என்ற கந்தபுராண வரிகள் இறைவனின்,
1. தடத்த நிலையை 2. அர்த்தநாரீஸ்வர நிலையை
3. சதாசிவமூர்த்தி நிலையை 4. சொரூப நிலையை விளக்கி நிற்கின்றன.

21. அநாதியாகவே பாசத்தாற் கட்டுண்டது,
1. பசு (ஆன்மா) 2. மாயை 3. பதி 4. ஆணவம்

22. பந்தம், தளை, மலம் ஆகிய பெயர்களினால் அழைக்கப்படுவது,
1. பதி 2. பசு 3. மாயை 4. பாசம்

23. அந்தக் காரணங்கள் எனப்படுபவை.
1. மெய், வாய், கண், மூக்கு, செவி 2.சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
3. நிலம், நீர், வளி, வான், தீ 4.மனம், பத்தி, சித்தம், அகங்காரம்

24. பிராரத்துவத்தை நாம் அனுபவிக்கும் பொழுது புதிதாக நாம் ஈட்டும் வினைகளை,
1. ஆகாமியம் 2. பிராரத்துவம்
3. சஞ்சிதம் 4.கன்மேந்திரியம் என அழைப்பர்

25. சீரகாழியிலே (தோணிபுரத்திலே) சம்பந்தர் சிவபெருமானிடம் பெற்ற தீட்சை,
1. நயனதீட்சை 2. ஔத்திரிதீட்சை
3. ஸ்பரிசதீட்சை 4. மானசதீட்சை

26. பிதிர்க்கடன் செய்வதற்கு கிழக்கு இலங்கையில் உள்ள விசேடமான திருத்தலம்.
1. மண்டூர் 2. மாமாங்கம்
3. கொக்கட்டிச்சோலை 4.திருக்கோயில்

27. சுந்தரமூர்த்தி நாயனார் மேற்கொண்ட நெறி,
1. யோகம் 2. ஞானம் 3. சரியை 4. கிரியை

28. நாட்டார் தெய்வ வழிபாட்டிலே முக்கியமான அம்சமாக விளங்குவது,
1. ஆண்டுப் பொங்கல் 2. குளிர்த்தி செய்தல்
3. காவியம் பாராயணம் பண்ணுதல் 4. தூளி பிடித்தல்

29. மண்டூர் முருகனுக்கு பூசை செய்பவர்கள்,
1. அந்தணர்கள் 2. பூசாரிமார்
3. கப்பூகர் 4. அடியார்கள்

30. திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்களின் பெருமைகளைத் தேவாரமாகப் பாடியவர்,
1. சுந்தரர் 2. மணிவாசகர் 3. சம்பந்தர் 4. அப்பர்

(தொடரும்)

## ஜனாதிபதித் தேர்தலில்

# மூன்றாவது பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது அரசியலமைப்பை மாற்றுவதற்கு உகந்த வழியாகும்

அண்மையில் சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் தமிழ் முஸ்லிம் மலையகக் கட்சிகளின் தலைவர் 24 பேர்வரை ஒன்று கூடி சிறுபான்மை மக்களின் நலனுக்கான ஐக்கியம் என்னும் மாநாட்டை நடாத்தி நாடு திரும்பினர். அத்தகைய கட்சிகளாலும் தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்ற இடதுசாரிக் கட்சிகளாலும் ஏன் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி நிறைவேற்று அதிகார முறைமையை ஆட்டம் காணச் செய்யும் ஒரு உறுதியான அரசியல் முடிவை எடுக்க முடியவில்லை.

அதற்குப் பதிலாக இரண்டு பேரினவாத முதலாளித்துவ தலைமைகளில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற சுயநலப் பதவி அரசியல் நடத்துவதிலேயே மேற்படி கட்சிகள் முனைப்புக் காட்டி வருகின்றன. எனவே மூன்றாவது பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்தி இருதரப்பிற்கும் ஐம்பது வீதத்திற்குக் குறைந்த வாக்குகள் வரக்கூடியதான ஒரு நிலையை ஏற்படுத்துவதன் மூலம் இன்றைய நிறைவேற்று அதிகார முறைமையைத் தோற்கடிக்கக் கூடிய ஒரு அரசியல் யாப்பு நெருக்கடியை உருவாக்க முடியும்.

அதனுடன் இணைந்த மக்கள் எழுச்சியின் மூலம் இந்நாட்டில் ஜனநாயகத்தையும் தேசிய இனங்களின் நியாயமான உரிமைகளையும் வென்றெடுக்கக்கூடிய அரசியல் தீர்வையும் நோக்கி முன்செல்ல முடியும். இதனை விடுத்து இரண்டு பேரினவாத வேட்பாளர்களில் யார் பக்கம் நிற்பது எனத் தீர்மானம் எடுப்பது பேரினவாதத்திற்கு அடிபணிந்து சேவகம் செய்யும் முடிவுகளாகவே இருக்க முடியும்.

எனவே இவ்வாறான ஒரு பொது வேட்பாளருக்கான சிந்தனையும் செயற்பாடும் நடைமுறைக்கு வர இன்னும் காலம் கடந்து விடவில்லை. இதனை தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் என்போரும் வெறும் செஞ்சட்டையும் தம்முள் பிரிந்து ஜனாதிபதித் தேர்தலில் நின்று வாக்களிக்க கோரும் இடதுசாரிகள் என்போரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### கே.ஏ. சுப்பிரமணியம் நினைவுதினக் கூட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா உரை

இவ்வாறு கடந்த ஞாயிறு அன்று கொழும்பில் இடம்பெற்ற தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 20 ஆவது நினைவு தினக் கூட்டத்தில் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ. தம்பையா கூறினார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சட்டத்தரணி இ. தம்பையா மேலும் தனது உரையில் கூறியதாவது,

இந்நாட்டின் தேசிய இனங்கள் ஒவ்வொரு காலகட்டங்களின் ஊடாகவும் இன, மொழி, பொருளாதார, அரசியல் நிலைகளில் புறந்தள்ளப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளில் மேற்கூறியவற்றுடன் இராணுவ ஒடுக்கு முறையினையும் மேற்கொண்டு வந்துள்ளனர். அவற்றின் ஒட்டு மொத்த விளைவையே இன்று தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இத்தகைய வழிமுறை நோக்கையே ஏனைய முஸ்லிம் மலையகத் தமிழ் மக்கள் மீதும் பேரினவாத முதலாளித்துவ வாதிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொறுப்புதாரிகள் ஆவர்.

யுத்தத்திற்கு எண்ணெய் வார்த்தவர்கள் ஜே.வி.பியனராவார். இவர்கள் மூன்று தரப்பினருமே இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரை நிறுத்தி வாக்குக் கேட்டு வருகிறார் கள். இதில் யாரை ஆதரிப்பது என்பதில் தமிழ் முஸ்லிம் மலையகக் கட்சிகள் தமது சுயநலப் பதவி நோக்குடன் பேரம் பேசுகிறார்களே தவிர தத்தமது மக்களின் எதிர்காலம் பற்றி கவனத்தில் கொள்ள வில்லை. இது தொடர்ந்தும் மக்களை ஏமாற்றிச் செல்லும் அரசியல் வழிமுறையேயாகும்.

இதற்குப் பதிலாக தேசிய இனங்களின் இருப்பையும் எதிர்காலத்தையும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் உறுதிப்படுத்தி அரசியல் தீர்வை வென்றெடுக்கக் கூடிய அரசியல் பொதுவேலைத்திட்டமே இன்று தேவைப்படுகிறது.

அத்தகைய பொதுவேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் தமிழ் முஸ்லிம் மலையகக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதுதான் முறையான அரசியல் நிலைப்பாடாக இருக்க முடியும்.

இதனை விடுத்து மஹிந்த ராஜபக்ஷவா அல்லது சரத்பொன்சேகாவா எனத் தெரிவுக்கு நிற்பது அரசியல் மடைமைத்தனமாகும். அத்துடன் இவ் இருவருக்கும் பின்னால் இருந்து வரும் அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகள் பற்றிய அபாயத்தையும் கண்டு கொள்ள வேண்டும். இவ்வாறு இரண்டு மேலாதிக்க சக்திகளும் பிரதானவேட்பாளர்களுக்குப் பின்னால் இருந்து செயல்படுவது தத்தமது மேலாதிக்க நலன்களுக்காகவே என்பதை மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இலங்கையில் நவகொலனித்துவமும் பேரினவாத யுத்தமும் ஒன்றுடன் ஒன்று இணைந்த நிலையிலேயே கடந்த முப்பது வருட யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. இதில் எந்த மேலாதிக்கம் தமிழருக்கு நல்லது எனத் தேர்ந்தெடுக்க முற்பட்டதன் விளைவையே தமிழ்த் தலைமைகளும் புலிகள் இயக்கமும் பேரழிவாகத் தமிழ்த் தேசிய இனத்திற்கு தேடித்தந்தார்கள்.

இத்தகைய பட்டறிவு காலம் கடப்பதற்கு முன்பாகவே இரண்டு பேரினவாதத் தலைவர்களில் ஒருவரை நல்லவராகத் தேர்ந்தெடுக்க நிற்பது எதிர்கால அழிவுக்குரியதாகும். சரியான முடிவை எடுப்பதற்கு அமெரிக்காவையோ அன்றி இந்தியாவையோ நம்பி அடிமைத்தனமாக நிற்காது மக்களை நம்பி நிற்கவேண்டும் என்பதே நமது நிலைப்பாடாகும் என்றும் கூறினார்.

# போர்ப்பகுதியில் அகப்பட்ட ட்ரக்குகளை மீட்டுத்தரக் கோரிக்கை

(கொழும்பு)

வன்னிப் பிரசேத்தில் யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் சிக்கியிருந்த பொதுமக்களுக்காக அரசாங்கத்தின் உணவு விநியோக நடவடிக்கையின் போது அங்கேயே சிக்கிக் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரக் வண்டிகளை மீட்டுத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ட்ரக் உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்கம் துரித மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் அந்தப் பிரதேசத்திற்கு வேறு தேவைகளுக்காக ட்ரக் வண்டிகளில் சென்று வந்த பலரும் யுத்த காலத்தில் அங்கு சென்ற ட்ரக் வண்டிகள் பலவும் சேதமடைந்த நிலையில் அங்கு கிடப்பதைக் கண்டதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வாறு ட்ரக் வண்டிகளை இழந்துள்ள உரிமையாளர்கள் பெரும் சிரம நிலைமைக்குத் தள்ளப்பட்டு துயரமடைந்திருக்கின்றார்கள். பலர் கடன் சுமைக்கு ஆளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட இலங்கையர்கள் விடுதலை

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எம்.வீ. சார்ளி எனப்படும் கப்பலில் கடமையாற்றிய இலங்கையர்கள் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர்.

நியூசிலாந்துக்கு சொந்தமான கப்பல் ஒன்றில் குறித்த இலங்கையர்கள் பணியாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற் கொள்ளையர்களுக்கும், நியூசிலாந்து கப்பல் நிறுவனத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் குறித்த இலங்கையர் உள்ளிட்ட கப்பல் பணியாளர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சோமாலிய கடற் கொள்ளையர்கள் கோரிய கப்பப் பணம் செலுத்தப்பட்டுள்ளதாக மற்றுமொரு தகவல் சுட்டிக்காட்டுகின்றது.

(ஓ-6)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இந்து மன்றக் கலைவிழாவில் மாணவத் தலைவி செல்வி மதுரா பாலசுப்பிரமணியம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அதிபர் திருமதி சுந்தரேசன், பகுதித் தலைவர் வி. வேலும் மயிலும், மன்றப் பொருளாளர் செல்வி ரி. தாரணி உட்பட மாணவிகள் நிற்பதையும் மன்ற உபதலைவர் செல்வி பி. மாதுமை உரையாற்றுவதையும் பகுதித் தலைவர் திருமதி அனங்கனா தவராஜா பரிசில் வழங்குவதையும் மன்றத்தலைவி செல்வி ஜெ. ஜெயராதிகா நிற்பதையும் மன்றச் செயலாளர் செல்வி ஏ. யசோதை நன்றியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## ஆசைக்கோர் அளவில்லை!

ஓர் ஊரில் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் கோயிலுக்குப் போய் கடவுளிடம் "கடவுளே நீ எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் உன் சந்நிதியில் ஒரு தேங் காய் உடைக்கிறேன்" என்று வேண்டிக் கொண்டான். கடவுள் பார்த்தார்.

உடனே அவன் முன்னால் தோன்றினார். "இந்தா நீ கேட்ட ஒரு இலட்ச ரூபாய்!" என்று சொல்லி அவன் கையில் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய்விட்டார். இவனால் நம்பவே முடியவில்லை... இவ்வளவு சுலபமாக கிடைக்குமென்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டியிருக்க வேண்டியதில்லையே ... என்று நினைத்தான்.

இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமை... அதற்காக பக்கத்திலிருந்த ஒரு கடைக்குப் போய் தேங்காயொன்றை கையில் எடுத்தான். "இது என்ன விலை?" என்று கேட்டான். ''ஐந்து ரூபாய்'' என்றார் கடைக்காரர். ''விலை அதிகமாயிருக்கிறதே என்றான்.

''அப்படியானால் நீங்கள் பக்கத்து ஊருக்குப் போங்க... அங்கே தென்னந்தோப்புகள் அதிகம். அதனால் இதை விடக் குறைந்த விலைக்கு கிடைக்கும்" என்றார். "சரி" என்று பக்கத்து ஊருக்குக் கிளம்பினான். அங்கே போய் விசாரித்தான். ''ஒரு தேங்காய் மூன்று ரூபாய்'' என்றார்கள்.

"இதுவும் அதிகமாக இருக்கிறதே!" என்றான்.

"அப்படியானால் ஒன்று செய்... அதோ அந்த ஆற்றோரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது. அதில் நீயே ஏறிப் பறித்துக் கொள். ஒரு தேங்காய்க்கு ஒரு ரூபாய் கொடுத்தால் போதும்!" என்றார் அந்தத் தோப்பின் உரிமையாளர்.

இவனுக்கு மரமேறத் தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? ஆற்றோரம் போனான். தட்டுத் தடுமாறி அந்த மரத்தில் ஏறினான். அந்தத் தென்னை மரம் வளைந்து ஆற்றுப்பக்கமாகப் போய் பின் நிமிர்ந்திருந்தது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு நடுவில் இருந்தது. ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.

இவன் கடவுள் கொடுத்த ஒரு இலட்ச ரூபாயை மடியில் வைத்து இறுக்கிக் கட்டிக் கொண்டான். உச்சிக்குப் போய் காய் பறிக்கும் சமயத்தில் காற்றும் மழையும் பலமாக அடிக்க ஆரம்பித்தது. கால் வழுக்கி விட்டது. சடாரென ஒரு தென்னை மட்டையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான்.

கீழே பயங்கர வெள்ளம். மடியில் ஒரு இலட்ச ரூபாய். என்ன செய்வ தென்று தெரியாமல் தவித்தான். இந்தச் சமயத்தில் கரையில் ஒரு யானைப்பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

"ஐயா... ஒரு உதவி" என்று கத்தினான். அவன், "என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"உன் யானையை மெதுவாக இங்கே அழைத்துக் கொண்டு வா... எனக்கு நேராகக் கீழே நிறுத்தி என் காலைப் பிடித்து கீழே இறக்கி விட்டுடு. என் மடியில் இருக்கும் பணத்தில் உனக்கு பத்தாயிரம் ரூபாய் தருகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான். காலைக் கையைப் பிடித்தால் கூட எவனும் இந்தக் காலத்தில் பத்து ரூபாய்க்கு மேல் தரமாட்டார்கள். இவன் காலைப் பிடித்தால் பத்தாயிரம் ரூபாய் தருகிறேன் என்கிறானே... என்று யோசித்தான்.

உடனே யானையைக் கொண்டு போய் அவனுக்கு நேராகக் கீழே நிறுத்தினான். அவனது காலைப் பிடித்தான். அவ்வளவு தான். அந்த நேரம் பார்த்து யானை மெதுவாக நடந்து அப்பால் போய் விட்டது. இப்பொழுது யானைப் பாகன் அவனது காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான். பரிதாபமாக மேலே பார்த்தான். அவன் மட்டையைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான்.

இப்பொழுது யானைப்பாகன் சொல்கிறான், "தம்பி... மட்டையை விட்டு விடாதே! கெட்டியாகப் பிடித்துக்கொள். நான் உனக்குப் பத்தாயிரம் ரூபாய் தருகிறேன். இதோ மடியில் தான் வைத்திருக்கிறேன்" என்றான்.

மேலே தொங்குபவனுக்கு இந்த நிலைமையிலும் ஒரு சந்தோசம்... மேற்கொண்டு பத்தாயிரம் ரூபா கிடைக்கும் போலிருக்கே என்று சந்தோஷப்பட்டான்.

இந்தச் சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தைக் குளிப்பாட்டுவதற்காக ஓட்டி வந்தான். இதை யானைப் பாகன் பார்த்து விட்டான்.

''ஐயா... ஒட்டகக்காரரே... அதை இங்கே கொண்டு வா. எங்கள் காலைப் பிடித்து பத்திரமாக இறக்கிவிடு. நாங்கள் பணம் கொடுக்கிறோம்" என்றான்.

அவனும் பணத்துக்கு ஆசைப்பட்டு வந்தான். அவன் காலைப் பிடிக்கும் சமயத்தில் ஒட்டகமும் நழுவிப் போய்விட்டது.

இப்பொழுது மூன்று பேரும் வரிசையாகத் தொங்குகிறார்கள். ஒட்டகக்காரன் கத்தினான். ''தம்பி... மட்டையை விட்டு விடாதே! கெட்டியாகப் பிடித்துக் கொள். நான் என் மடியிலிருக்கும் ஐந்து ஆயிரத்தை உனக்குத் தருகிறேன்" என்றான்.

மேலே தொங்குபவனுக்கு இன்னும் சந்தோஷம். இவனும் பணத்தைத் தருகிறேன் என்கிறான். அப்படியானால் இன்றைக்கு மொத்த பணவரவு எவ்வளவு என்று ஒவ்வொன்றாகக் கூட்டிப் பார்த்தான். மனக் கணக்குச் சரியாக வரவில்லை.

அதனால் விரலை விட்டு எண்ண ஆரம்பித்தான். அவ்வளவு தான்! மட்டையிலிருந்து கை நழுவி விட்டது. மூவரும் பொத்தென்று ஆற்றில் விழுந்தார்கள். படாதபாடு பட்டுத் தட்டுத் தடுமாறிக் கரைக்கு வந்து சேர்ந்தனர். மூவரது மடியிலிருந்த பணம் முழுவதும் ஆற்றோடு போய்விட்டது.

பேராசை பெரு நஷ்டம் என்றொரு பழமொழி உண்டல்லவா! அதை விளக்குவதற்காகத் தான் இந்தக் கதை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்திய மருந்து நிறுவனங்கள் மீதான தடையை நீக்கவும்

## இலங்கை அரசிடம் இந்தியா கோரிக்கை

(கொழும்பு)

இந்திய மருந்து நிறுவனங்கள் மீதான தடையை நீக்குமாறு இலங்கை அரசுக்கு இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

மருந்து குப்பிகளில் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடித்துகள் இருப்பதால் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி 6 இந்திய மருந்து நிறுவனங்களுக்கு தடைவிதித்துள்ளது இலங்கை அரசு.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக இந்திய தூதர் அசோக் கே. காந்தா இலங்கையின் சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத்துறை அமைச்சர் நிமல் ஸ்ரீபாலா டி சில்வாவை கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

அப்போது மருந்து நிறுவனங்கள் மீதான தடையை மறுபரிசீலனை செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த மருந்து நிறுவனங்கள் பல ஆண்டுகளாக மருந்து விற்பனையில் முன்னணியில் உள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்திய மருந்து நிறுவனங்கள் இலங்கைக்கு முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சரிடம் உறுதி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களின் மருந்துகளின் தரம் குறித்து புகார்கள் எதுவும் இதுவரை வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

## உலக உணவுத்திட்டம் $3\frac{1}{2}$ கோடியே அ.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க உலக உணவுத்திட்டம் 2009 -2010 ஆம் ஆண்டுக்கான நிதி உதவியை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளதுடன் அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி உலக உணவுத் திட்டம் 13 கோடியே 49 இலட்சத்து 7 ஆயிரத்து 780 அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக வழங்கவுள்ளது. (ஓ-6)

## நிவாரணக் கிராமங்களில் இருந்து ஆறாயிரத்து 222 பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

இம்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு வவுனியா நிவாரணக் கிராமங்களில் இருந்து 6 ஆயிரத்து 222 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

அவர்களுக்கென 51 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பரீட்சைக்கு நிவாரணக் கிராமங்களிலிருந்து ஆயிரத்து 310 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் உட்பட 6 ஆயிரத்து 222 பேர் தோற்றுகின்றனர்.

இது தவிர வவுனியா மாவட்ட பாடசாலைகளில் 5 ஆயிரத்து 611 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

இவர்களுக்கென 51 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு வவுனியா வலயக் கல்வி பணிப்பாளர் ரஞ்ஜனி ஒஸ்வேர்ல்ட் தெரிவித்துள்ளார். (ஓ)

## இராசி பலன்

05-12-2009
(கார்த்திகை 19 சனிக்கிழமை)
திருதியை முற்பகல் 8.27 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 6.09 மணிவரை
புநர்பூசம் முன்னிரவு 10.39 மணிவரை
இராகுகாலம் 9.16 - 10.46 மணிவரை
சுபநேரம் 3.16 - 4.46 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | நல்ல செய்தி, புதிய முயற்சி, சுபசெலவு, போசன சுகம். |
| இடபம் | உறவினர் சந்திப்பு, காரிய சித்தி, பிரயாண நன்மை, தனலாபம். |
| மிதுனம் | தொழில் நன்மை, பணவிரயம், காரிய தாமதம், வீண் பகை. |
| கடகம் | போசன சுகம், புதிய முயற்சி, தேகநலன், நண்பர்கள் சந்திப்பு. |
| சிங்கம் | காரிய அலைச்சல், மனஸ்தாபம், தனவிரயம், வேலைச்சுமை. |
| கன்னி | பெருமையடைதல், தனலாபம், உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| துலாம் | தூரதேசச் செய்தி, காரிய சித்தி, போசன நன்மை, அதிகாரம். |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, உஷ்ண நிலை, தந்தை வழி உறவு. |
| தனுசு | பிறருக்கு உதவுதல், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், போசன சுகம். |
| மகரம் | களஸ்திர நன்மை, பிரயாணம், பொருள் சேர்க்கை, பெரியோர் உதவி. |
| கும்பம் | தொழில் நன்மை, எடுத்த காரியம் கைகூடும், நற்கீர்த்தி, போசன சுகம். |
| மீனம் | கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு, தனவிரயம். |

வளவன்

## திடீர்மரண விசாரணை அதிகாரிகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகையை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி மரண விசாரணை ஒன்றுக்கு தபால் மற்றும் ஆவணச் செலவு உட்பட 500 ரூபாவும் பொது வாகன வசதி இல்லாத பகுதிகளில் ஒரு மைலுக்கு 10 ரூபா வீதமும் பொதுவாக வசதியுள்ள பகுதிகளுக்கு மைலுக்கு 6 ரூபா வீதமும் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. (ஓ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 130 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 |
| கோவா | 100 | 120 | 110 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 150 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 150 |
| லீக்ஸ் | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 180 | 150 |
| முருங்கைக்காய் | 160 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 90 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |

# பீடை நாசினிகளின் தோற்றமும் வகைகளும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பீடை நாசினிகள் சட்டம் (Pesticides Act) 1980 ஆம் ஆண்டு இலக்கம் 33 இல் வரையறை செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்திருந்ததிலிருந்து பீடைநாசிகளின் பயன்பாடு ஓரளவிற்கு சீராக்கப்பட்டதெனலாம். இதற்குப் பின்பு இந்த சட்டம் இலக்கம் 6 இனைக் கொண்டதாக 1994 இல் மீளப் புதுப்பிக்கப் பட்டது.

இவ்வாறு புத்துயிர் அளிக்கப்பட்ட போது பீடை நாசினிகள் இறக்குமதி, பொதி செய்தல் (Packaging), பெயரிடுதல் (Labeling) சேமித்தல், புதுவகை பீடைநாசினியாக உற்பத்தி செய்தல் (Formulation) போக்குவரத்து, விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பனவற்றை திட்டமிட்ட வரையறைக்குள் உள்ளான தாக்குவதற்காக பீடை நாசினிகளுக்கான தொழில்நுட்ப ஆலோச னைக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவினுடைய பரிந்துரைக்கமைவாகவே பீடை நாசினிகள் பயன்படுத்தப் பட்டன. இந்த தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில்(Technical and Advisory committee) பின்வருவோர் அங்கத்தவர்களாய் இருக்கின்றனர்.

* விவசாய திணைக்களத்தினது பணிப்பாளர்
* பீடை நாசினிகள் பதிவாளர்
* அரச பகுப்பாய்வாளர்
* சுகாதார அமைச்சினது செயலாளர்
* தொழில் திணைக்களத்தினது ஆணையாளர்
* தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினது பணிப்பாளர்
* இறப்பர் ஆய்வு செயலாக்க கோவை 439 இன் கீழாக நிறுவப்பட்ட இலங்கை த்ர நிர்ணய நிறுவகம் (Srilanka Standards Institution) உறுப்பினர் ஒருவர்.
* 1984 ஆம் ஆண்டு இலக்கம் 6 இல் நிறுவப்பட்ட இலங்கைத் தர நிர்ணய நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர்
* 1971 ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்தி சட்ட இலக்கம் 46 இன் கீழாக நிறுவப்பட்ட தென்னை ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர்.
* 1980 ஆம் ஆண்டு தேசிய சுற்றாடல் சட்ட இலக்கம் 47 இன் கீழாக நிறுவப்பட்ட மத்திய சுற்றாடல் சபை (Central Environmental Authority) இலிருந்து சிரேஷ்ட உறுப்பினர் என அனைவரையும் உள்ளடக்கியதாகும்.



**இனியொரு பசுமைப் புரட்சிக்கு...**

இவர்களுடன் பீடைநாசினிகள் பயன்பாடு, மற்றும் பீடை கட்டுப்பாடு அதனுடன் சார்ந்த ஆராய்ச்சியுடன் தொடர்புடைய ஆகக்கூடிய 5 உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்கள்.

இவர்களில் எவரும் வர்த்தக ரீதியிலான பீடை நாசினி உற்பத்தி, இறக்குமதி செய்தல், வர்த்தக ரீதியான புதிய வகைகளாக உருவாக்குதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டிருக்கக் கூடாது.

இவ்வாறான பீடை நாசினிகளுக்கான சட்டத்தின் வரையறைகளுக்குள்ளேயே எமது நாட்டில் எவரும் பீடை நாசினிகளைக் கையாள முடியும். இவ்வாறான சட்டம் முறையாக அமுல்படுத்தப்படும் இடத்து பீடை நாசினிகளால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து ஓரளவுக் கேனும் விடுபடலாம். இச்சட்டத்தினை அடிப்படையாக வைத்து எவ்வாறான முறையில் நாமனைவரும் இணைந்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதனை பீடைநாசினிகளின் வகைகள் * * * * பற்றி அறிந்த பின் பார்ப்போம்.

### கார்பமேற்று பீடை நாசினிகள்

கார்பமேற்று பீடை நாசினிகளுள் கார்பரில் புரோபொக்ஷர் மற்றும் கார்போபியூரான் என்னும் இரு பூச்சி நாசினிகள் சிறப்புக்குரியவை. கார்பரில் வெட்டியுண்ணும் வாயுறுப்புகளைக் கொண்டு பயிர்களில் சேதத்தையேற்படுத்தும் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தும் திறனுடைய்தால் இது தொடுகை மூலமாக பூச்சிப் பீடைகளின் உடலுக்குள் சென்று அவற்றை கொலை செய்யும் தன்மையுடையது. கோவா நாற்றில் இலையை அரித்து சேதத்தையேற்படுத்தும் கருநீல நிற சிறிய வண்டினை கட்டுப்படுத்த என்டோசல் பான் இனையும் கார்பரில் இனையும் பயன்படுத்தலாம் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் விட அதிவிசேடமான பூச்சி நாசினியாக கார் போபியூரான்(Carbofum) அல்லது பியூரடான் (Furadan) இனைக் குறிப்பிடலாம். கார்போபியூரான் ஒரு சிறந்த ஊடுபுகுந்து (Systemic) செயலாற்றும்

9-XXII

தன்மையுடைய குருனல் வடிவிலான பூச்சி நாசினி. இன்றுவரை சாறு உறுஞ்சும் பூச்சிகளை சிறப்பாக கட்டுப்படுத்துவதற்கு இதனை பயன்படுத்தப்படுகின்றர்.

குருனர் வடிவினதாக இருப்பதனால் இதனை 1 அங்குல நீருள்ள வயல் நிலத்திற்கு விசிறும் போது குருனல் நீரில் கரைந்து வேரினூடாக அகத்துறிஞ்சப்பட்டு தாவரம் முழுவதுமாக செறிவடைந்து விடும். இதன்மூலம் தாவரத்தின் எந்தப் பகுதியிலாயினுஞ் சேதத்தை ஏற்படுத்தும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்த முடியும்.

எக்காரணங் கொண்டும் கார்போபியூரானை நீரில் கரைத்து விசிறக் கூடாது. இதனால் பாதகமான விளைவுகள் ஏற்பட சாத்தியமுண்டு.

மேலே குறிப்பிட்டது போல விளை நிலத்திலோ நாற்று மேடையிலோ 1 அங்குல அளவிற்கேனும் நீர் இருக்க வேண்டும். நீரில் கரைய முடியாது விடில் இவ்வாறான பூச்சி நாசினிகளை விசிறியும் எதுவித பயனும் ஏற்படாது. (தொடரும்)

# வெற்றிலையில் தாக்கும் பிரதான நோய்களும் முகாமைத்துவ முறைகளும்

### இலை, கீழ்த்தண்டு அழுகல்

பைட்றொய்தொரா வகையைச் சேர்ந்த பூஞ்சணங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. வெற்றிலைப் பயிரின் ஆறுமாதம் அல்லது அதற்குச் சற்று அதிகமான வயதுப் பருவத்திலிருந்தே தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

மார்கழி, தை மாதத்தில் நோயின் தீவிரம் கூடுதலாகக் காணப்படும்.

இளவாலையில் இலை கீழ்த்தண்டு நோயினால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடியின் தோற்றம்



### அறிகுறிகள்

வெற்றிலைக் கொடிகள் திடீரென காய் ந்து விழுவதை அவதானிக்கலாம். நோயினால் பாதிக்கப்பட்ட கொடிகளின் இலைகள் மஞ்சளாகி கீழ்நோக்கி தொங்கி விடுகின்றன. இதனால் இவ்விலைகள் பசுமையான நிறத்தையும் பளபளப்புத் தன்மையையும் இழந்து மஞ்சளாகி விடுகின்றன.

நோயுற்ற கொடிகள் விரைவில் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முழவதுமாய் காய்ந்து விடுகின்றது. அத்துடன் வெற்றிலைக் கன்றுகள் பழுப்பு நிறமாகி உடையும் தன்மை கொண்ட உலர் குச்சிபோல் மாறி விடுகின்றன. நோயுற்ற தண்டின் அடிப்பகுதியில் நிலத்திற் கருகில் தண்ணீர் கசிந்துள்ளது போன்ற புள்ளிகள் தோன்றும்.

இப் பூஞ்சணங்கள் வேர்களையும் தண்டுப் பகுதியையும் தாக்குகின்றன. நோயுற்ற கொடியைப் பிடுங்கிப் பார்த்தால் கணுப்பகுதி கருமை நிறமாகி அழுகி இருப்பதை அவதானிக்கலாம். பயிரின் இளம் பருவத்திலே பூஞ்சணங்கள் இலை அழுகல் அறிகுறிகளையும் தோற்றுவிக்கின்றன.

நோயுற்ற கொடியின் தரைப்பகுதி அருகிலுள்ள இலைகளில் வட்டமான அல்லது ஒழுங்கற்ற வடிவமுடைய தண்ணீர் நனைந்தது போன்றபுள்ளிகள் உண்டாகின்றன. சில சமயங்களில் நோயுற்ற இலைப்பகுதி அழுகி சிதைந்து விடுகின்றன.

### பரவுகை

* இப்பூஞ்சணங்கள் மண்ணில் உயிர் வாழும் தன்மை கொண்டவை.
* ஒரு தோட்டத்திலிருந்து மற்றத் தோட்டங்களுக்கு நீர்ப்பாசன நீர் மூலமாக பரவுகின்றன.
* குளிர்ச்சியான காலமான கார்த்திகை தொடக்கம் மாசி மாதங்களில் இரவு வெப்பநிலை 23°C க்கு குறைவாகவுள்ள போது இப்பூஞ்சணங்கள் நன்கு வளர்ச்சியடைந்து கூடுதலான தாக்கத்தை காட்டுகின்றன.

### முகாமைத்துவம்

* நோயுற்ற கொடிகளைக் கவனமாக வேருடன் பிடுங்கி வெற்றிலைத் தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும்.
* இலை அழுகல் அறிகுறியுடைய வெற்றிலைகளை சேகரித்து எரித்துவிடல்.
* வெற்றிலைக் கொடிக்கு வேப்பம் பிண்ணாக்கு வேப்பமிலைகள் இடுவதால் நோயின் தாக்கம் குறையும்
* வேப்பம் விதைச்சாறு பயன்படுத்தல்

அழுத்தப்பட்ட வேப்பம் விதை உட்பகுதியில் 50 கிராமை ஒரு மெல்லிய துணியால் சுற்றிக் கட்டி 1 லீற்றர் வரை நீரில் ஓரிரவு வரை அமிழ்த்தி வைக்கவும். பின்னர் இதனை (10 கிராம் சவர்க்காரத்தூள்) சவர்க்காரக் கரைசலுடன் கலந்து தெளித்தல்.

### இலைப்புள்ளி (பங்கசு)

கொலிட்ரோடிரைகம் கிளியோஸ் போரிடெஸ் (Colletotrichum gloesporides) என்னும் பூஞ்சணத்தினால் ஏற்படுகின்றது.

### அறிகுறிகள்

இலைகளில் சிறிய கருமை நிற வட்ட வடிவமான புள்ளிகளைக் காணலாம். பின்பு இவை பெரிதாகி இரண்டு ச.மீ அளவுவரையிலும் காணப்படும். இப்புள்ளிகளைச் சுற்றி வெழுத்த மஞ்சள் நிற வளையம் காணப் படும். ஒரு இலையில் ஒன்றுக்கு மேற்பட்ட புள் ளிகள் தோன்றலாம். பெரும்பாலும் முதிர்ந்த இலைகளிலே தோன்றும்.

### பரவுவகை

இப்பூஞ்சண வித்துக்கள் காற்றின் மூலமாகவும் மழைத்துளியாலும் பாசன நீர்மூலமாகவும் பரவும். நோயுற்று கீழே உதிர்ந்து மண்ணில் காணப்படும் இலைகளிலும் உயிர் வாழும்.

**செல்வி ந. கவிதா**
விவசாயப் போதனாசிரியர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்

### முகாமைத்துவம்

* அறுவடையின் போது நீக்கப்படும் நோயுள்ள இலைகளை சேகரித்து அப்புறப் படுத்தி எரித் துவிடல் வேண்டும்.
* பப்பாசிக்கரைசல் விசிறுதல்

20 மில்லி லீற்றர் பப்பாசிப்பால் எடுக்கப்பட்டு 1 லீற்றர் நீர் சேர்த்து வடித்தெடுக்கப்பட்ட கரைசலை கொடிக்கு விசிறுதல். (முற்றும்)

> ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீது தான் பெரும்பாலான அரசுகள் அழிந்தன
>
> – யங்

வலம்புரி

# அரசியலின் அநாகரிகத்தை அழகுறக் காட்டும் ஜனாதிபதித் தேர்தல்

'அரசியல்' என்பதற்கு ஒத்த சொல் தேடினால் 'திருகுதாளம்' என்பதனையே கண்டறிய முடியும். அந்தளவிற்கு மிகப் பெரும் கீழ்த்தர நிலையில் எமது நாட்டு அரசியல் உள்ளது.

இலங்கை அரசியல் என்பதில் மட்டும்தான் சிறுபான்மை என்ற பேச்சுக்கு இடமில்லை. பெரும்பான்மை இனத்திற்கு இருக்கக்கூடிய அரசியல் துன்பம் சிறுபான்மை இனமான தமிழ், முஸ்லிம் இன அரசியலிலும் தாராளமாக உண்டு.

சில இடங்களில் சிங்கள அரசியல்வாதிகளைவிட தமிழ் அரசியல்வாதிகள் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறக்கூடியதான குத்துக்கரணங்களை அடித்து தூள்கிளப்புகின்றனர்.

இந்த உண்மைகள் இதுவரை மறைமுகமாக இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் உண்மைத் தன்மைகளை பட்டவர்த்தனமாவதை காணமுடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் பிரதான வேட்பாளர்களாக போட்டியிடுகின்ற போதிலும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவதில் தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டு நிற்பதை பார்க்கும் போது, தமிழ் இனத்தின் துன்பம் தீரப்போவதில்லை என்பதும் அந்தத் துன்பத்தை தீர்க்கவல்லார் எவரும் இல்லை என்பதும் புலனாகின்றது.

இது மட்டுமன்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்லில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதில் முடிவு எடுக்க முடியாமல் தமிழ்க் கட்சிகள் உடைபடும் ஆபத்தும் தாராளமாக உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் பெரும்பான்மை சார்ந்த இருவர். அவர்கள் இருவரில் ஒருவரே ஜனாதிபதியாகப் போகின்றார்.

இதில் ஜனாதிபதி அவரா? இவரா? என்பதை அடுத்த ஆண்டு ஜனவரி 26ஆந் திகதி நிர்ணயம் செய்யும்.

நிலைமை இதுவாக இருக்கும் போது தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு சூழலைக் குழப்புவது ஏன்?

சுயநலம் மேலோங்கி இருக்கும் போது பொது நலம் மறைந்து போவது வழமை என்ற தத்துவத்திற்கமையவா?

எதுவாயினும் தமிழ் அரசியல் கட்சிகளின் பின்னால் தமிழ் மக்கள் எவரும் இல்லை என்ற மறைமுகமான உண்மை ஆறுதலைத் தருகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் நினைக்கின்றன. தாம்தான் தமிழ் மக்களை வழிப்படுத்துவதாக. ஆனால் தமிழ் மக்கள் நினைக்கின்றார்கள் எங்கள் அரசியல்வாதிகள் பாவம் என்று.

யார் எதைக் கதைத்தாலும் எந்தத் தீர்மானம் எடுத்தாலும் தமிழ் மக்கள் சொந்தப் புத்தியில் செயற்பட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர்.

அதனை அவர்கள் மிகத் திறமையாக செய்வார்கள் என நம்பலாம்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 7 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தின

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட 7 அரசியல் கட்சிகள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

ஜனசத பெரமுன கட்சியின் சார்பில் பத்திரமுல்ல சீலரத்ன தேரர் நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

அதுதவிர மேலும் ஆறு வேட்பாளர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய, 'சகலரும் நாட்டு மக்கள் சகலரும் அரசர்கள்' அமைப்பின் எம்.பி. தமினிமுல்ல ஆகியோரும் கட்டுப்பணம் செலுத்தியவர்களில் அடங்குகின்றனர்.

சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜே.ஏ.பீற்றர் நெல்சன் பெரேரா, புதிய சிஹல உறுமயக் கட்சியின் சரத் மனமேந்திர, தேசிய அபிவிருத்தி முன்னணியின் அசுல அசோக சுரவீர ஆகியோரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக பி.ரி.பி.எஸ்.ஏ.லியனகேவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முடிபடைவதுடன் 17ஆம் திகதி வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கால எல்லை டிசம்பர் மாதம் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் 7ஆம் திகதியுடன் நிறைவடையும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அரச ஊழியர்களுக்கு போதியளவு காலத்தை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

எவ்வித காரணத்திற்காகவும் மீண்டும் கால எல்லை நீடிக்கப்பட மாட்டாது என தேர்தல்கள் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு கிடைக்கின்ற விண்ணப்பங்களை உடனடியாக உறுதிப்படுத்தி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# அறிவுறுத்தல் கூட்டம்

(அலவாய)

க.பொ.த.(சா/த) பரீட்சைச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவுள்ள இணைப்பு நிலைய உத்தியோகத்தர், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர், மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடமராட்சி வலயம், வலிகாம வலயம், கோப்பாய் கோட்டம் ஆகியவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை தவறாது சமூகமளிக்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ-4)

# உயிர்த்திடும் உறவுகள் இறுவட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் விசேட கல்வி மாணவர்களுக்கான உயிர்த்திடும் உறவுகள் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு வித்தியாலய சுப்பிரமணிய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி திருமதி ஜெயமலர் தியாகலிங்கம், கௌரவ விருந்தினராக யாழ். வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர் ச. சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ். தே.க.கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரன் வழங்கவுள்ளார். (ஓ-9)

# மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் உயிர் இழந்ததாக தெரிவித்து இளைஞர் ஒருவனின் சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வி.சி. லேன் மருதனார்மடத்தைச் சேர்ந்த வரதகுமார் பிரதீபன் (வயது 17) என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டது. இவர் மின்னிணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் மின்சாரத் தாக்குதலுக்கு உட்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# பன்றிக் காய்ச்சலால் கண்டியில் 13 வயது மாணவர் உயிரிழப்பு

சரசவி உயன கல்லூரியில் பயின்ற 13 வயதான மாணவர் ஒருவர் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகி போதனா வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருப்பதாக மத்திய மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. உயிரிழந்த மாணவர் வைத்தியசாலை ஊழியரின் பிள்ளை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கண்டி மாவட்டத்தில் பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்த இரண்டாவது மாணவர் என மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே 14 வயது மாணவர் ஒருவர் பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளதாக இரத்தினபுரி பெரிய ஆஸ்பத்திரியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை பன்றிக் காய்ச்சல் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இலங்கையில் இதுவரை பன்றிக் காய்ச்சல் காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# கண்காட்சியும் விற்பனையும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகமும் தென்மராட்சிப் பெண்கள் அதிகார சபையும் இணைந்து நடத்தும் பெண்களின் சுயதொழில் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன், சாவகச்சேரி கிராம உத்தியோகத்தர் இ. சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும்தென்மராட்சியிலுள்ள சகல பெண்கள் விவகார அமைப்பின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



ஒவ்வொருவனும் தன்னுடைய வழிதான் சிறந்தது என்று நினைக்கிறான். மிகவும் நல்லது. ஆனால் உனக்கு வேண்டுமானால் அது நல்லதாக இருக்கலாம் என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும். ஒருவனால் சிறிது கூட ஜீரணிக்க முடியாத ஓர் உணவு, மற்றொருவனுக்கு எளிதில் ஜீரணமாகக் கூடியதாக இருக்கும்.

உனக்குப் பொருத்தமாக இருப்பதனாலேயே ஒவ்வொருவனுக்கும் அதுதான் வழி. சங்கரனுக்குப் பொருத்தமான சட்டை சந்திரனுக்கும் சங்கரிக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு தாவி விடாதே. கல்வியறிவில்லாத, பண்பாடற்ற, சிந்தனையில்லாத ஆண், பெண் அனைவரும் இத்தகைய குறுகலாக சட்டைக்குள் புகுத்தப்பட்டிருக்கிறார்கள்!

நீயாகவே சிந்தித்துப்பார். நாத்திகனாக இருந்து விட்டுப் போ! இந்த உலகமே பெரிது என்று நினைக்கும் இலெகிகனாக இருந்து விட்டுப் போ! அதுகூட எவ்வளவோ பரவாயில்லை. மனதைப் பயன்படுத்திச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மனிதனுடைய வழி தவறானது என்று சொல்வதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உனக்கு வேண்டுமானால் அது தவறாக இருக்கலாம்.

அதாவது, நீ அந்த வழியைப் பின்பற்றினால் அதனால் உனக்கு கேடு விளையக்கூடும். ஆனால் அதற்காகக அந்த வழியால் அவன் கீழ்நிலையை அடைந்து விடுவான் என்பது அதன் பொருளல்ல.

## அடுத்தாண்டு முதல்

# ஓசோன் படையில் துளைகளை ஏற்படுத்தும் மாசுக்கள் வெளியேறுவது முற்றாக நிறுத்தம்

ஓசோன் படலத்தில் துளையிடக்கூடிய குளோரோ புளோரோ காபன் (CFC) ஹேலான், காபன் டெட்ரா குளோரைட் மாசுக்கள் இந்த உலகிலிருந்து வெளியேறுவது 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து முற்றிலுமாகத் தடுக்கப்படுகிறது.

சூரியனிலிருந்து வரக்கூடிய புற ஊதா கதிர்களை , பூமியைச் சுற்றியுள்ள ஓசோன் படலம் போர்வை போல் காப்பதால், நாம் அதிகளவான வெப்பத்திலிருந்து தப்புகிறோம்.

கடந்த 1970 ஆம் ஆண்டு முதல் ஓசோன் படலத்தில் துளை ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக , 1985 இல் வியன்னாவில் நடந்த மாநாட்டில் விரிவாக விளக்கப்பட்டபோது உலகம் அதிர்ச்சி அடைந்தது. ஓசோன் துளை, புவியின் வெப்ப நிலை உயர் வுக்குக் காரணமாக அமைந்தது. பருவ நிலையில் மாற்றம் ஏற்படுவதற்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந் தது.

1987 இல் கனடாவில் உள்ள மொன்றியல் நகரில் ஓசோனைக் காப்பாற்றும் வகையில் ஐ.நா. சார்பில், மாநாடு நடந்தது. குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகளில் பயன்படுத்தப்படும் குளோரோ புளோரோ காபன் (CFC) தீ அணைப்புக் கருவி உள்ளிட்டவற்றில் பயன்படுத்தப்படும் ஹேலான்கள், ஆடை மற்றும் உலோக சுத்திகரிப்பு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் காபன் டெட்ராகுளோரைட் மற்றும் தொழிற் சாலைகளில் பயன்படும் மெதையில் குளோரோ போம் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உபயோகத்தை, 2010 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாக நிறுத்திவிடவேண்டும் என்று தீர்மானம் இயற்றப்பட்டது.

195 நாடுகள் கையொப்பம் இட்டுள்ள மொன்றியல் உடன்படிக்கையின்படி, தற்போது 97 சதவீத ஓசோனுக்கு கேடு விளைவிக்கும் மாசுக்கள் தடுக்கப்பட்டுள்ளன. இது தான், உலகிலேயே மிகவும் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்ட சர்வதேச சுற்றுச்சூழல் ஒப்பந்தம்.

2010 ஆம் ஆண்டிலிருந்து முற்றிலுமாக இந்த மாசுக்கள் வெளியேறாது. என்றாலும், ஓசோன் படலம் தன்னை சரி செய்து கொண்டு பழைய நிலைக்கு, 2050 ஆம் ஆண்டில் தான் திரும்பும் என்று 2006 இல் நடந்த ஓசோன் துளை தொடர்பான அறிவியல் பூர்வ மதிப்பீடு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும், தற்போது குளிரூட்டிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளில் குளோரோபுளோரா காபனுக்கு பதிலாக, ஓசோனுக்கு கேடுவிளைவிக்காத "ஹைட்ரோபுளோரோ காபன்" மற்றும் "ஹைட்ரோகாபன்கள்" பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனுக்கு கேடு விளைவிக்காவிட்டாலும், காபனீரொட்சைட்டைப் போலவே இவையும் பச்சையில்ல விளைவை ஏற்படுத்துவதால் புவியின் வெப்பநிலை உயர்வுக்குக் காரணமாக அமைகின்றன.

எனவே, அடுத்து இவற்றையும் முற்றிலும் நீக்கும் முயற்சிகளும் சவால் நிறைந்ததாகவே தொடர்ந்து வருகின்றன. 1931 இல்அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி யில் "டியுபாண்ட்" எனும் நிறுவனம் தான் முதன் முதலில், குளோரோ புளோரோ காபன் (CFC) தயாரிக்கும் தொழிற் சாலையை தொடங்கியது. தற்போது இதுபோன்ற 'குளோரோ புளோரோ காபன் (CFC)' உற்பத்தி தொழிற் சாலைகளுக்கு முடிவு வந்துவிட்டது என்று கூறலாம். சட்டவிரோதமாக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஓசோனுக்கு. கேடுவிளைவிக்கும் பொருட்களை கடத்துவதை தடுக்கவும், ஐ.நா.வின் சர்வதேச சுங்க நிறுவனம் கடினமான சுற்றுச்சூழல் குற்ற சட்ட விதிமுறைகளை அமுல் செய்துள்ளது.

### உருகும் பனி

ஆர்டிக் மற்றும் அந்தாட்டிக்கா பகுதியில் ஓசோன் இழப்பு குளிர்காலத்தில் அதிகமாக ஏற்படுகிறது. அப்போது வெப்பநிலை -78 டிகிரிக்கு செல்லும்போது, குளிர்ச்சி அடைந்த மேகங்கள் பனிக்கட்டிகளாக மாறுகின்றன. இந்தப் பனியில் மாசுகளான நைத்திரிக் அமிலம், சல்பூரிக்கமிலம் ஆகியன கலந்து குளோரோ புளோரோ காபன் (CFC) வினை புரிய தூண்டுகின்றன. ஆகவே அப் பகுதியில் வெப்பம் அதிகரித்து பனி உருக காரணமாக அமைகின்றன. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தற்போது அந்தாட்டிக்கா பகுதியில் ஓசோனில் துளை ஏற்பட்டுள்ளது.


### பூமியை காக்க

வளிமண்டலத்தில் சேர்ந்துள்ள மாசுக்களில் காபனீரொட்சைட் 86சத வீதம் ஓசோனுக்கு கேடுவிளைவிக்கும் குளோரோ புளோரோ காபனின் (CFC) உபயோகத்துக்கு பதிலாக ஹெட்ரோ புளோரோ காபன் பயன்படுத்துவதால் அது வளி மண்டலத்தில் காபனீரொட்சைட் மாசுக்களின் அளவு 9 சதவீதமாக கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்று சர்வதேச தட்பவெப்பநிலை நிறுவன தலைமை செயலாளர் மைக்கேல் ஜக்கார்ட் தெரிவித்துள்ளார். இவையும் புவி வெப்பமாக காரணமாக அமைகின்றன.

ஓசோனுக்கு கேடு விளைவிக்கும் இரசாயனங்களை குறைத்தது போல் தொழிற் சாலை வாகன மற்றும் பிற மாசுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த டிசம்பர் மாதம் 15 இல் கோன் கோபன் ஹேகனில் நடைபெறும் உச்சி மாநாட்டில் நாடுகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. வளர்ந்த நாடுகளும் பிற நாடுகளும் அதை சரியாக கடைப்பிடிக்கும் பட்சத்தில் இந்தப் பூமி நாம் வாழத் தகுந்ததாக தொடரும்.

### காடுகளுக்கு பாதிப்பு

ஓசோனில் ஏற்பட்டுள்ள துளை புவி வெப்பமயமாவதற்கு காரணமாக அமைவதால் காடுகளின் அடர்த்தி குறைகிறது. காடுகள் அழிவதாலும் மனித தேவைகளுக்கு அழிப்பதாலும் காபன் மறு சுழற்சி பாதிக்கப்படுவதால் புவி மேலும் வெப்பமடைகிறது.




### பருவநிலை மாற்றம்

வெப்பம், ஈரப்பதன் காற்று மற்றும் வளிமண்டலத்தில் உள்ள இரசாயனப் பொருட்களும் ஓசோனை பாதிக்கின்றன. ஓசோன் பாதிக்கப்பட்டால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் பூமியை அடைவதால் பருவ நிலை மேலும் பாதிப்படையும்.

பருவநிலை பாதிப்பு வறண்ட பூமியையும் விளைச்சலில் பாதிப்பையும் ஏற்படுத்தி விவசாயத்துக்கு பெரிய இழப்பை ஏற்படுத்துகின்றது.

அந்தாட்டிக் பகுதியில் ஏற்பட்டுள்ள துளை தற்போது கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவில் பெரிதாக உள்ளது. தரையிலிருந்து 50 கி.மீ தெலைவில் உள்ள ஸ்ராடஸ்பியர் வளிமண்டல பகுதியில் தான் ஓசோன் வாயு காணப்படுகிறது. சூரியனிலிருந்து வரும் அதிக வெப்பமிக்க தோல் புற்றுநோய் ஏற்படுத்தக் கூடிய புற ஊதாக் கதிர்களை இந்த வாயுப்படலம் பிரதிபலித்து பூமியில் விழாமல் தடுத்து விடுகிறது. இதனால் மனிதர்கள் தாவரங்கள் மற்றும் விலங்குகள் காக்கப்படுகின்றன. ஓசோன் துளை உள்ள இடங்களில் புற ஊதாக் கதிர்கள் புகுந்து விடுவதால் பூமியின் தரைப்பகுதியில் வெப்பம் அதிகரிக்கிறது.

# ஊழலற்ற ஆட்சி நடக்காவிடில் அதிபர் பதவியில் வேறு நபரை அமர்த்துவோம்

## ஆப்கான் அதிபருக்கு அமெரிக்கா எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் ஊழலற்ற அரசு நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அதிபர் பதவியில் வேறு நபரை அமர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என அதிபர் கர்சாய்க்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஆப்கான் மீது தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை வீழ்த்திய அமெரிக்கா கர்சாயை அதிபராக்கியது. இரண்டு முறை நடந்த தேர்தலில் கர்சாய் அதிபராக தேர்வு செய்யப்பட்டார். இருப்பினும் ஆப்கானிஸ்தான் அனைத்து விஷயங்களிலும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சார்ந்துள்ளது. பாதுகாப்புப் பணியில் 70 ஆயிரம் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் ஈடுபட்டுள்ளன. 35 ஆயிரம் நேட்டோ படைகளும் இந்த நாட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தலிபான் மற்றும் அல்-கொய்தா பயங்கரவாதிகளின் அட்டகாசம் அதிகம் உள்ளதால் கூடுதலாக 30 ஆயிரம் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்ப அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை அதிகாரி ரொபர்ட் ஜிப்ஸ் குறிப்பிடுகையில்,

மக்களுக்கு தேவையானதை அளிப்பது தான் அரசின் வேலை. இதை செய்யாத ஆட்சியாளர்களை மக்கள் ஒதுக்கி தள்ளி விட்டு அவர்களுக்கு தேவையானவர்களைத் தேர்ந்தெடுப்பர்.

ஊழலற்ற ஆட்சியை கர்சாய் இந்த முறை ஏற்படுத்தியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் ஊழலற்ற ஆட்சியை நடத்தும் திறனுடைய நபரை அதிபர் பதவியில் அமர்த்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே இதை உணர்ந்து செயல்பட வேண்டுமென அதிபர் ஒபாமா கர்சாயிடம் தெரியப்படுத்தியுள்ளார். இவ்வாறு ஜிப்ஸ் கூறினார். தவிரவும் ஆப்கான் குறித்த அமெரிக்க அதிபர் ஒபாமா பேசிய பேச்சை நான்கு கோடி அமெரிக்கர்கள் நேரடியாக டி.வியில் கேட்டனர் என்று கூறப்பட்டது. (ஓ-6)

# இமயமலை உச்சியில் நேபாள அமைச்சரவை கூட்டம்

இமயமலையில் நேபாள 'அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகக் காலநிலை மாற்றம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு இமயமலையில் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றை நடத்த அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

உலகின் மிக உயர்ந்த மலை உச்சியில் நடைபெறும் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஒக்டோபர் மாதம் மாலைதீவு அமைச்சரவைக் கூட்டம் கடலில் நடத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் வாரம் கொபன்கெனில் நடைபெறவுள்ள உலக காலநிலை மாற்றம் குறித்த மாநாட்டுக்கு சமாந்தரமாக இந்த அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




துரித கதியில் உலகம் வெப்பமயமாகி வருவதனால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஹெலிகொப்டரின் மூலம் பிரதமர் உள்ளிட்ட 21 நேபாள அமைச்சர்களும் இமய மலை உச்சிக்கு செல்லவுள்ளனர். அமைச்சரவை பிரதிநிதிகளை இமயமலை உச்சியில் தங்கியிருக்கும் சார்பா பிக்குகள் வரவேற்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

# பட்டமளிப்பு விழாவில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்

## அமைச்சர்கள் உட்பட 22 பேர் பலி

சோமாலியாவில் பட்டமளிப்பு விழா ஒன்றில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் அமைச்சர்கள், வைத்தியர்கள் , மாணவர்கள் உள்ளிட்ட 22 பேர் பலியாகியுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையிலான பெற்றோர்கள் பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்திருந்ததுடன் தமது கண் முன்னால் பிள்ளைகளைப் பறிகொடுத்த பரிதாப சம்பவத்தினால் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

பெனாடிர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஷெமோ ஹோட்டலில் நடைபெறவிருந்த சந்தர்ப்பத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பெண் தற்கொலை குண்டுதாரி ஒருவரே இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பலியானோரில் இருவர் முக்கிய அமைச்சர்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# மர்லின் மன்றோவின் படம் ரூபா 1 1/2 கோடிக்கு ஏலம்



ஹொலிவுட் நடிகைகளில் கவர்ச்சியால் உலகத்தையே கலக்கியவர் மர்லின் மன்றோ. 1962 ஆம் ஆண்டு தனது 36 ஆவது வயதில் மர்மமான முறையில் அவர் இறந்து போனார். ஆனாலும் அவர் புகழ் இன்றளவும் மங்காமல் இருக்கிறது. மர்லின் மன்றோவுக்கு கஞ்சா புகைக்கும் பழக்கம் உண்டு. 1959 ஆம் ஆண்டு அவர் தன் நண்பர்களுடன் உட்கார்ந்து கஞ்சா புகைப்பதை வீடியோ படம் எடுத்துள்ளனர். அந்தப் படம் ஒன்று ஒருவரிடம் இருந்தது. அதை அவர் ஏலத்தில் விற்க முடிவு செய்தார்.


அந்தப் படம் ஏலத்தில் விடப்பட்டபோது அதை ஒருவர் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். அவர் பெயரை ஏலக் கம்பனி வெளியிட மறுத்துவிட்டது. மர்லின் மன்றோ தொடர்பான பல்வேறு நினைவுப் பொருட்களை அவர் திரட்டி வைத்திருக்கிறார். (ஓ-6)

# முன்னணி வீரர்கள் பிரகாசம்; இந்தியா 726 ஓட்டங்கள் குவிப்பு

## இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இலங்கைக்கு 334 ஓட்டங்கள் இலக்கு

(மும்பை)

முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்க இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 726 ஓட்



டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணி 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது. இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபடைய 2-வதுபோட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 2 ஆம் திகதி மும்பையில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 393 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திலகரட்ண டில்சான் 109 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்யூஸ் 99, பரணவிதான 53 ஓட்டங்களையும் பிரசன்ன ஜெயவர்த்தன 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் பிரக்ஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான், சிறிசாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 443 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 3 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 15 ஓட்டங்களை சேர்த்த நிலையில் 2-வது விக்கெட்டையிழந்தது.

ஆரம்பம் முதலே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இரட்டைச் சதம் கடந்த விரேந்திர சேவாக் 254 பந்துகளில் (40 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள்) அடங்கலாக 293 ஓட்டங்களைக் குவித்து முரளிதரனின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்து 7 ஓட்டங்களால் முச்சதம் அடித்து சாதனை படைக்கும் வாய்ப்பையிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டெண்டுல்கர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். எனினும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ராகுல் ராவிட் 147 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 74 ஓட்டங்களை எடுத்து வெலகெதரவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 487 ஓட்டங்களை எடுத்து 3-வது விக்கெட்டையிழந்தது.

இந் நிலையில் 4-வது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர்-லக்ஷ்மன் ஜோடி சிறப்பாக ஆட இந்திய அணி 96 ஓவர்களில் 500 ஓட்டங்களைக் கடந்தது.


இதில் டெண்டுல்கர் 88-வது பந்தில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். எனினும் சச்சின் டெண்டுல்கர் 103 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து குலசேகரவின் பந்து வீச்சில் நேரடியாக போல்டாகி ஆட்டமிழந்து 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடக்கும் வாய்ப்பையிழந்தார்.

தொடர்ந்து யுவராஜ் சிங் களமிறங்க மறுமுனையில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 79-வது பந்தில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். எனினும் இந்திய அணி 591 ஓட்டங்களை எடுத்தபோது வி.வி.எஸ்.லக்ஷ்மன் 91 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து முரளிதரனின் பந்து வீச்சில் குலசேகரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துத் தோனி களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 124 ஓவர்களில் 600 ஓட்டங்களைக் கடந்தது. இதில் யுவராஜ் சிங் 23 ஓட்டங்களுடனும் அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன் சிங் ஒரு ஓட்டத்துடனும் சகீர்கான் 7,சிறிசாந் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 670 ஓட்டங்களை எடுத்து 9-வது விக்கெட்டையும் இழந்தது.

ஒரு பக்கம் விக்கெட்டுக்கள் வீழ்ந்தபோதும் மறுமுனையில் அணித் தலைவர் தோனி 96 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் இறுதி விக்கெட்டுக்காக இணைந்த தோனி-ஓஜா ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி 159.4 ஓவர்களில் 700 ஓட்டங்களை எட்டியது. இதில் அணித் தலைவர் தோனி 154 பந்



துகளில் தனது 3-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 163.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 726 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித் தலைவர் தோனி 154 பந்துகளில் (3 பவுண்டரிகள், 6சிக்ஸர்கள் உட்பட) 100 ஓட்டங்களையும் பிரக்ஜன் ஓஜா 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும் ரங்கண ஹேரத் 3 விக்கெட்டுக்களையும் வெலகெதர, குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந் நிலையில் 334 ஓட்டங்களை எடுத்தால் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க முடியும் என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பரணவிதான 8, டில்சான் 3 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். இப் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### இந்திய அணியின் அதிக ஓட்டங்கள்

இப் போட்டியில் இந்திய அணி முதலாவது 9 விக்கெட்டுக்களையிழந்து 726 ஓட்டங்களை எடுத்தமையே டெஸ்ட் அரங்கில் பெற்ற அதிக ஓட்டங்கள் ஆகும்.

இதற்கு முன் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 2004 ஆண்டு சிட்னியில் நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 705 ஓட்டங்களை எடுத்தமையே டெஸ்ட் அரங்கில் அந்த அணி இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற அதிக ஓட்டங்கள் ஆகும்.

# ஆசிப், கனேரியா அசத்தல்; நியூசிலாந்து அணி சுருண்டது

(வெலிங்டன்)

ஆசிப், கனேரியாவின் சிறப்பான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 99 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 165 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் 2-வது டெஸ்ட் நேற்று முன்தினம் வெலிங்டனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி வெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 6 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 2 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 264 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கம்ரான் அக்மல் 70 ஓட்டங்களையும் உமர் அக்மல் 46 ஓட்டங்களையும் இம்ரான் பர்காத் 32, உமர்புல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் தௌப்பி, விக்டோரி ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் ஓ பிறின் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 36.5 ஓவர்களில் 99 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ரெய்லர் 30 ஓட்டங்களையும் பிளைன் 29 ஓட்டங்களையும் எலியோட் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மொகமெட் ஆசிப் 4 விக்கெட்டுக்களையும் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் உமர் குல் 2 விக்கெட்டுக்களையும் மொகமெட் அமீர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 165 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 2 விக்கெட்டுக்களையிழந்து 64 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இம்ரான் பர்காத் 35 ஓட்டங்களையும் சல்மான் பட் 18 ஓட்டங்களையும் அணித் தலைவர் மொகமெட் யூசுப் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஓ பிறின் வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தார். இப் போட்டியில் பாகிஸ்தான் அணி நியூசிலாந்து அணியை விட 229 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள நிலையில் 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பிரவோ பொறுப்பான சதம்; மேற்கிந்தியத் தீவுகள் பலம்



பிரவோவின் சிறப்பான சதத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி சரிவிலிருந்து மீண்டு வலுவான இலக்கை எட்டியது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 டெஸ்ட், 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் 2-வது டெஸ்ட் நேற்று அடிலெய்ட் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத்தில் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 2 விக்கெட்டுக்களையிழந்தது.

சிறில் பாரத் 3 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ஹயில் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்துக் களமிறங்கிய சர்வான் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நீடிக்காமல் வெளியேற மேற்கிந்தியத் தீவுகள் அணி 84 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் தொடர்ந்து இணைந்த சந்தர்போல்-பிரவோ ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 336 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரவோ 156 பந்துகளில் (12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 104 ஓட்டங்களையும் சந்தர்போல் 62 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் நாஷ், சமி ஆகியோர் தலா 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் பொலிங்கர், வோட்ஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பத்து அம்ச கோரிக்கையை முன்வைத்து...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாம் கண்மூடித்தனமாக எதையும் எதிர்ப்பதையோ அல்லது கண்ணை மூடிக் கொண்டு எதையும் ஆதரிப்பதையோ ஒரு போதும் விரும்பவில்லை.

ஓர் அரசியல் வேலைத்திட் டத்தின் அடிப்படையிலேயே அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வந்தோம். அதன் அடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடைமுறைச்சாத்தியமான வழிமுறையிலான 10அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி இருப்பதானது எமது அரசியல் இலக்கை எட்டுவதற்கான சூழலை நிச்சயம் உருவாக்கியே தீரும் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த 10அம்சக் கோரிக்கைகளும் வருமாறு,

1.தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வாக 13ஆம் திருத்தச் சட்டத்தில் ஆரம்பித்து படிப்படியாக கூடுதல் அதிகாரங்களை பெற்று மத்தியில் கூட்டாட்சி,மாநிலத்தில் சுயாட்சி என்ற அரசியல் இலக்கை நோக்கி முன்னேறுதல்.

2.தமிழர்கள் இலங்கையர்களாகவும் அதேவேளையில் தமிழர்களாகவும் இருப்பதற்கான அவர்களது விருப்பங்களை உறுதிப் படுத்துதல்.

3.இலங்கையர் என்ற நிலையான சமத்துவ உணர்வை-இனக்குழுமம் என்ற அடிப்படையில் பண்பாட்டையும். இனங்களுக்கு இடையில் சமத்துவத்தையும் பேணுதல்.

4.வன்னிப் பகுதியில் இருந்தும், அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்தும் இடம் பெயர்ந்த எமது மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான வாழ்வியல் உரிமைகளுக்கான செயற்திட்டங்களை விரிவாக நடைமுறைப் படுத்தல்.

5.கடந்த 3தசாப்தங்களாக நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் என்பவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு வன்முறைகளற்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல்.

6.அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களுக்கும் சரணடைந்தவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கி புனர்வாழ்வளித்தல் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த உண்மைகளை கண்டறிந்து ஆராய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7.கடந்த காலங்களில் பொருளாதார அபிவிருத்தி கவனிக்கப்படாமலும், நீண்ட கால யுத்த சூழ்நிலைகளால் அபிவிருத்தி காணப்படாமலும் இருக்கின்ற தமிழ் பிரதேசங்களை முன்னுரிமை வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

8.இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போல் ஏ-9 பாதை உட்பட ஏனைய போக்குவரத்திலும் தடைகளற்ற பயணத்தை உறுதிப் படுத்துதல்.

9.தமிழ் மொழி உரிய சமத்துவ அந்தஸ்தை நிர்வாக ரீதியில் திட்டமிட்டு விரிவாக்கி இலங்கை அரச நிர்வாகத்தில் தமிழ் பேசும் மக்கள் அன்னியப்பட்டவர்கள் என்ற நிலையை அகற்றி எமது மக்களுக்கு அனைத்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்குவதோடு தமிழ் பேசும் மக்களும் இம் நாட்டின் பங்காளிகளே எனும் நிலையை உரு வாக்குதல். இலங்கையின் மத்திய பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளில் இனவீதசார அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்.

10.தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் வரலாற்று வாழ்விடங்களில் இருந்து தாம் அகற்றப்பட்டு விடுவோம் என எழுந்திருக்கும் சந்தேகங்களை நீக்கி ஐக்கிய இலங்கைக்குள் அவர்களது வரலாற்று வாழ்விடம் அவர்களுக்கே உரியதே என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துதல்.

ஆகிய 10அம்சக் கோரிக்கைகளை குறித்து நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி இருப்பதோடு அவற்றை ஓர் அறிக்கையாகவும் சமர்ப்பித்துள்ளோம்.

எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவை அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் வெற்றியடையச் செய்வதன் மூலமே எமது தலைவிதியைத் தீர் மானிக்கக் கூடிய தீர்வு நோக்கி எங்களால் முன்னேறமுடியும்.

தான் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளை ஜனாதிபதி நிறைவேற்றி வைப்பதற்கான பொறுப்பை தாமே ஏற்றுக் கொள்வதாகவும், இலங்கையில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறொருவரையும் பூரண நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் ஆதரிப்பதற்கு முடியாதுள்ளது என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

## நலன்புரி முகாமிலிருந்து சென்...

தொடர்பில் விளக்கமளித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க இடம் பெயர்ந்த மக்கள் கைதிகள் போன்று அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யாகி யுள்ளது எனவும் கூறினார்.

இது வரை சுமார் 22ஆயிரம் பேர் வரையில் வெளியில் சென்றுள்ளனர். அவர் களில் 9ஆயிரம் பேர் திரும்பி வந்துள்ளனர். அத்துடன் வெளியில் சென்றவர்களில் மீண்டும் முகாம்களுக்கு திரும்ப வேண்டுமென அர சாங்கம் கட்டாயப்படுத்தவில்லை என்றும் சொன்னார்.

நலன்புரி முகாம்களில் சுமார் 2 இலட்சத்து 82ஆயிரம் பேர் இருந்தனர். ஆனால் தற்போது ஒரு இலட்சத்து 12 ஆயிரம் பேர் முகாம்களில் இருக்கின்றனர்.

ஆகவே நாம் 70வீதமான மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தியுள்ளோம். எஞ்சியுள்ளவர்களை எதிர் வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மீள் குடியமர்த்துவோம் என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (ச)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்...

சேகாவும் எதிரெதிராக தேர்தல் களத்தில் நிற்கிறார்கள். இது தவிர தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த சிங்கள தலைவர் ஒருவர் இடதுசாரிகள் முன்னணி சார்பில் போட்டியிடுகிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்வரை ராஜபக்ஷவையோ, பொன்சேகாவையோ நிச்சயமாக ஆதரிக்க முடியாது.

இனப்படுகொலை செய்த இவர்களை ஆதரிக்கக்கூடாது என்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் விருப்பமாகும். ராஜ பக்ஷவும், பொன்சேகாவும் தொடர்ந்து எங்களுக்கு தூது அனுப்பி வருகிறார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களை சந்தித்து ஆதரவு கேட்டு வருகிறார்கள். எந்த நிலையிலும் இவர்களை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்.

எங்கள் கூட்டமைப்பின் சார்பில் ஒரு தமிழ் வேட்பாளரை அதிபர் தேர்தலில் நிறுத்துவோம். தமிழர் வெற்றிபெற முடியாத நிலை இருந்தாலும் இலங்கை தமிழர்களின் உணர்வுகளை உலகம் அறிய செய்வதற்காக இந்த போட்டி அவசியமாகும்.

இதனால் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் எங்கள் உயிரே போனாலும் நாங்கள் எந்த சமரசத்துக்கும் உடன்பட மாட்டோம். தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி கிடைக்க வேண்டும். இதனை எங்கள் கூட்டமைப்பின் தலை வர்களிடம் வலியுறுத்தியுள்ளேன்.

ஒருவேளை எங்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தாவிட்டால் நானே சுயேட்சையாக தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளேன் என்றார் சிவாஜிலிங்கம். (ஓ-6)

## இந்தியா அழை...

நோக்கிப் புறப்படவுள்ளார்.

இந்தியாவின் விசேட அழைப்பை ஏற்று கடந்த 2ஆம் திகதி இந்தியா சென்ற ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முற்பகல் இலங்கை திரும்பியுள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கடும் குழப்ப நிலையில் இருக்கும் இந்திய அரசாங்கம் ஜெனரல் சரத் பொன்சேகாவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமரக எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதிமொழியொன்றைப் பெற்றுக்கொள்ள எண்ணியிருப்பதாக தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## சந்திரிகாவின்...

அவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக் கிய தேசியமுன்னணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் பசில் ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவார். பிரித்தானியாவில் வசித்து வரும் விமுக்தி மிருக வைத்தியராக கடமையாற்றி வருகின்றார். (ச-5)

## சுயமாக சிந்தித்து முடிபெடுக்...

போதனைகளும் தரப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் எந்தவொரு அரசியல் கூட்டமைப் பிற்குள்ளும் அது சிக்கிக்கொண்டிருக்க வில்லை. அதனால் எமது கைகள் எந்த விதத்திலும் கட்டப்பட்டிருக்கவில்லை.

சுயமாகச் சிந்தித்து சுதந்திரமாக முடிபெடுக்கும் திறனை கூட்டமைப்பு இழந்து விட்டிருக்கவில்லை. இழக்கவும் மாட்டாது.

ஜனாதிபதித் தேர்தலில் எமது நிலைப்பாடு என்பது தென்னிலங்கை தமிழ் மக்களை வேறாகவும் வடக்குக் கிழக்கில் மாகாண தமிழ் மக்களை வேறாகவும் பிரித்துப் பார்க்கும் தவறான அணுகு முறையின் அடிப்படையில் அமைய முடியாது.

ஒட்டு மொத்தமாக முழு இலங்கைத் தீவிலும் வாழும் தமிழ் மக்கள் தொடர்பில் ஓர் முழுமையான அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டே நாம் முடிபெடுக்க வேண்டும்.

அவசரப்படாமல் சுயமாகச் சிந்தித்து நிதானமாக விவாதித்து கூட்டமைப்பு விரை வில் முடிபெடுக்கும். (ச-5)

## புலிகளின் பணத்தில் வெற்றி...

பேசும் போது மேற் கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நாம் இந்த ராஜபக்ஷவின் தனியாட்சிக்கு முடிவு கட்ட பல கட்சிகளை இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய முன் னணியை உருவாக்கியுள்ளோம்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் வரவால் இன்று இந்த அரசு தடுமாறிப்போயுள்ளது.

மகிந்த ராஜ பக்ஷவின் தனியாட்சியை-குடும்ப ஆட்சியை ஒழித்து இந் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த பல கட்சிகளுடன் நாம் ஒன்றிணைந்துள் ளோம்.

2005ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு பணத்தைக் கொடுத்து பதவிக்கு வந்த ராஜபக்ஷ இன்று விடுதலைப் புலிகளின் பணத்தைக் கொண்டு தேர்தலில் ஈடுபடுகின்றார்.நாம் இவரின் விளையாட்டுகளுக்கு பயப்படப்போவதில்லை.வரும் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறப் போகும் தேர்தலில் ஜெனரல் சரத்பொன்சேகா நிச்சயம் வெற்றி பெறுவார்.இந்நாட்டு மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்றார். (ச-5)

## இளம் தம்ப...

இவர்கள் இருவரையும் காணாததையடுத்து அவர்களின் உறவினர்கள் தேடிச் சென்றபோது இருவரும் வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றுக்குள் சடலமாக காணப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக நேற்று நள்ளிரவு சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்ட யாழ்.நீதவான் வி.ஆனந்தராஜா மருத்துவப் பரிசோதனைகளுக்காக சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## கே.கே.எஸ்...

அவற்றிலிருந்து இறக்கப்பட்டு அடையாள அட்டை, பொதி என்பன சோதனை யிடப்பட்டன. நீண்டகாலத்திற்குப் பின்னர் இவ்வாறான வீதிச் சோதனைகள் திடீரென இடம் பெற்றதால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை காணப் பட்டது. (ச-5)

## ஜெனரல் பொன்சேகாவுக்கு எதி...

ஆர்ப்பாட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அசாத் சாலியின் ஆதரவாளர்கள் நண்பகல் மருதானை ஜும்மா பள்ளி வாசலுக்கு அருகில் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேளை அங்குவந்த வேறு சில முஸ்லிம்கள் அசாத் சாலிக்கு எதிராக குரல் எழுப்பியதுடன் பொறுப்பற்ற முறையில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் குற்றம் சாட்டினார்கள்.

அதேவேளை பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்கள் தொழுகை முடிபடைந்ததும் பள்ளிவாசலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர்.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பி சரத் பொன்சேகாவிற்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா யுத்த காலத்தில் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக செயற்பட்டவர் என எழுதப்பட்ட சுலோகங் களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த அசாத் சாலி அப்போது சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ நடத்தாமல் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து இவ்வாறான போராட்டங்களை நடத்தி தொழுகையில் ஈடுபட்ட மக்களுக்கு குழுப்பம் விளைவித்துள்ளார் என்று முஸ்லிம்கள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர். (ச-5)


பட்டதாரிகளுக்கான
-வழிகாட்டல் செயலமர்வு-
வழங்குபவர்:- பேராசிரியர் மா.சின்னத்தம்பி
(கல்வியியற்துறை-யாழ். பல்கலைக்கழகம்)
விடயம்:- மக்கள் சபை செயலாளர் பதவிக்கான கருத்திட்டம் தயாரித்தல்
காலம்:- 06.12.2009 ஞாயிறு
காலை 9 மணி-12 மணி
செயலமர்வு கட்டணம்:- 300/=
இடம்:- யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபம்.
Conducted By:- AMJS
(4131)

EDUCATION YEAR -2010
ICT Gr 10 & 11
05.12.2009 (4pm- 6pm)
Mr. S.Branavan
(B.A(Hons), MACS, Dip. in Comp.Sys.Design(NIBM))
Mon & Fri 4.15 - 6.15
IECE 121/1 Arasady Road, Kanthermadam

SUBRA
சித்தன்கேணி- வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும்
தரம் 1 - முதல் O/L வரை (தமிழ்- ஆங்கில மொழி மூலம்)
புதிய பிரிவு ஆரம்பம்:05.12.2009 சனி காலை 8.00
இடம் பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த மாணவர்கட்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
(4119)

SPOKEN ENGLISH
for KIDS from Grade 3 upwards
SPOKEN ENGLISH WITH GRAMMER
By:- MR.K.RAMANATHASAN
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845
கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.

EDUCATION YEAR- 2010
BASIC COMPUTER STUDIES FOR KIDS
05-12-2009 For Grade 6,7,8 & 9 12-12-2009
4.15pm Mr. P.VINOTHAN 5.00pm
Online Classes For Kids Individual Observation
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845

VACANCIES
கணினி விரிவுரையாளர் (பெண்) பகுதி நேரம்
(For School Children Gr 6 - Gr 9)
MS Office, DTP தெரிந்தவர்கள் CVயுடன் நேரில் வரவும்
பெண் லிகிதர் (Clerk) CV, கல்வித் தகமைகளுடன் நேரில் வரவும்
ஆங்கிலம், கணினி அறிவு இருப்பது விரும்பத்தக்கது.
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845
கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.